இதழ் 182

# மண்

ஜேர்மனி / 2017
பங்குனி - சித்திரை
March - April



8th MARCH
WOMEN'S
DAY

அனைத்துலக பெண்கள் தினம்
பங்குனி - 8 / 1990 - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னியில் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டம்
கிளிநொச்சி மாவட்டம் - பரவிப்பாஞ்சான
முல்லைத்தீவு மாவட்டம் - கேப்பாப்புலவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

அண்மைக் காலங்களில் குழந்தைகள் மீதான காமுகர்களினதும் கள்வர்களினதும் வக்கிரங்கள் வெகுவாக அதிகரித்து வருகின்றன. ஒன்றுமேயறியாத பச்சிளம் குழந்தைகள் தொடக்கம் பதின்ம வயதுடைய சிறார்களின் மீதான-குறிப்பாகச் சிறுமிகள் மீதான கொடுமைகளும் கொடூரங்களும் பாலியல் வன்மங்களும் அதன் விளைவான கொலைகளும் எல்லா நாடுகளிலும் ஒப்பீட்டளவில் கூடிக் கொண்டே வருகின்றன. இந்த நிலைமையில் தமது குழந்தைகளின் மீது பெற்றோரும் உடன் பிறப்புகளும் மிக அவதானமாக இருப்பது அத்தியாவசியமாகும்.

அன்புக்கும் காமத்திற்கும் வித்தியாசம் அறியாதவர்கள் நமது குழந்தைகள். உள்ளத்தினுள்ளே நஞ்சை வைத்துக் கொண்டு, உதடுகளில் சிரிப்பைக் காட்டி ஒரு குழந்தையைப் பெற்றோர் அல்லது உடன் பிறப்பில்லாத ஒருவர் அணைத்துக் கொள்வதன் ஆபத்தை நாம் இனம் காணாதவரை, நமது குழந்தைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஒருவர் தன்னை அணைத்துக் கொள்கிறாரென்றால், அணைத்து முத்தம் தருகிறாரென்றால் குழந்தைகள் நெகிழ்ந்து விடுகிறார்கள். அவ்வாறான நெகிழ்வு குழந்தைகளின் இயல்பு. ஆனால், தன்னை அணைப்பவரின் அந்த அணைப்பிற்கும் முத்தங்களுக்கும் பின்னால் ஒளிந்திருக்கும் கபட நெஞ்சத்தையும் காமுக எண்ணத்தையும் குழந்தைகளினால் அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆக, இந்த விடயத்தில் பெற்றோரும் குழந்தையின் வயது வந்த உடன்பிறப்புகளுமே கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

நமது மிக நம்பிக்கைக்குரிய இரத்த சொந்தங்களைத் தவிர வேறு யாரும் நமது பெண் குழந்தைகளுடன் நெருங்கிப் பழக அனுமதித்தல் ஆகாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் நண்பர்களென்றோ, தெரிந்தவர்களென்றோ நமது குழந்தைகளை அவர்களோடு பயணம் செய்வதற்கோ, தனியாக இருப்பதற்கோ அனுமதிக்கக் கூடாது. இந்த விடயத்தில் எல்லோரையும் சந்தேகத்தோடு அணுகினாலும், அது நமது குழந்தையைத் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பதற்காகவே என்பதனால், அந்தச் சந்தேக எண்ணம் நமக்கிருப்பதில் தப்பேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக வெளியார் ஒருவரினால் குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்குள்ளாகுவதை விட, நமக்குத் தெரிந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் மூலமாகவே பாதிக்கப்படுகிறார்கள் என்று பல ஆய்வுகள் தெளிவாகத் தெரிவித்துள்ளன. ஆதலால், தயவு தாட்சண்யமின்றி இந்த விடயத்தில் நமது குழந்தைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளின் நடத்தையில் சிறிய மாறுதல் தென்பட்டாலும் உடனடியாகக் குழந்தைகளுடன் பேசுங்கள். அன்பாகவும் ஆதரவாகவும் அவர்களை அணுகி, அவ்வாறான மாற்றத்திற்கான காரணத்தை அறிய முற்படுங்கள். தான் பாதிக்கப்பட்டதைப் பயத்தினாலோ, வேறு காரணங்களினாலோ மறைத்துத் தனக்குள்ளேயே போராடும் குழந்தைகள், நமது அக்கறையும் பாசமும் கலந்த அணுகுமுறையினால் நம்மிடம் உண்மைகளைக் கூற நிறைய வாய்ப்புகள் உள்ளன.

குழந்தைகளைக் கடைகளுக்கோ, உறவினர் வீடுகளுக்கோ அல்லது விழாக்கள் நடைபெறும் இடங்களுக்கோ தனியே அனுப்பாதீர்கள். பிரத்தியேக வகுப்புகளுக்கு உரிய நேரத்தில் சென்று உரிய நேரத்தில் குழந்தை திரும்புவதையும் உறுதிப்படுத்துங்கள். அத்தோடு குழந்தையின் முக, உடல் தோற்றங்களிலும் நடத்தையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றதா என்பதையும் அடிக்கடி கண்காணியுங்கள்.

பக்கத்து வீட்டு இளைஞனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு எரித்துக் கொலை செய்யப்பட்ட ஏழு வயதுச் சிறுமி ஹாசினியின் கதையை நாம் மறப்பதற்குள் மூன்று வயதாகும் சிறுமி ரித்திகாவின் கொலை தமிழகத்தில் அரங்கேறியிருக்கிறது. அதுவும் பக்கத்து வீட்டுப் பெண்ணொருவர் அன்போடு கூட்டிச் சென்று, பின்னர் அங்குள்ள ஆண் ஒருவரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட கொடுமை நிகழ்ந்திருக்கிறது.

குழந்தைகளைக் குறி வைத்துக் குதறும் காமுகக் கழுகுகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. அக்கழுகுகளிடமிருந்து நமது குழந்தைகளைக் காப்பாற்றும் மிகப் பெரிய பொறுப்பு நமது கைகளில்தான் இருக்கிறது. பொறுப்பற்ற பெற்றோராக, உடன்பிறப்புகளாக நாம் இருந்துவிட்டுப் பின்னர் கைசேதப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆகவே, அனைவரும் விழிப்புடன் இருப்போம்! -ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## தீவினை அகற்று..

இராமாயண காவியத்தின் ராவணன் தனக்கு உரிமை இல்லாத சீதையை அபகரித்ததினால் பட்ட துன்பங்கள் எத்தனை?..பாரதத்தில் பாண்டவர்களின் ராஜ்யத்தை வஞ்சகமாகத் தனதாக்கிக் கொண்டதினால் கௌரவர்களின் கதி என்னாயிற்று?..இதே போல உயிர்ப் பிராணிகளை வதைத்தவர்கள் வருந்திய கதையெல்லாம் அறிவீர்கள். நம்முடையது அல்லாத பிறர் பொருளைத் திருடுதல், உயிர்ப்பிராணிகளைக் கொலை செய்தல் இவை எல்லாம் பாவமான செயல்கள். இவற்றைச் செய்தால் உன்னை ஊரும் உலகமும் வெறுத்து ஒதுக்கும். துன்பங்கள் தொடரும். கெட்ட செயல்களாகிய தீவினை செய்வோர் சந்தோஷமாக வாழமுடியாது. ஆகையால் பாவச் செயல்களான தீவினைகளைச் செய்யாதே என்கிறார் ஔவைப்பாட்டி.

## துன்பத்திற்கு இடம் கொடேல்..

ஒருவரது வாழ்க்கை இன்பமாக இருக்க வேண்டும். மனம் சஞ்சலமின்றி அமைதியாக இருக்குமானால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். உடல் நலம் ஒழுங்காக இருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கக் கேட்பானேன்?.. மனம் அமைதி இல்லாமல் போவானேன்?.. ஏதாவது ஒரு பொருளை இழந்தால், உறவினர் யாராவது இறந்தால் வருத்தம், வேதனை ஏற்படுகின்றது. இது இயற்கைதான். ஆனால் இத்தகைய வேதனை, வருத்தத்திலேயே நாம் ஆழ்ந்துவிடக்கூடாது. விரைவிலேயே அந்தத் துக்கத்தை-வேதனையை மறந்துவிட வேண்டும். அப்படி இல்லாமல் வேதனைப்பட்டுக்கொண்டு இருந்தால் மனம் கெடும். உடம்பு கெடும், வாழ்வு கெடும். ஆகவே மனவருத்தத்திற்குச் சிறிதும் இடம்கொடுக்கக்கூடாது என்கிறார் நம் ஔவைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

**31.சூதும் வாதும் வேதனை செய்யும்**
சூதும்-சூதாடுதலும், வாதும்-வீண் வாதாடுதலும் வேதனையைச் செய்யும். துன்பமும் வந்து சேரும்.

**32.செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்**
ஒருவன் தான் செய்யும் தவத்தை மறந்துவிட்டால் அவனை அறியாமை ஆட்கொள்ளும். (கைதவம்-அஞ்ஞானம், ஆளும்-ஆட்சிபுரியும்)

**33.சேமம் புகினும் யாமத்து உறங்கு**
சேமம்-காவல் கூடத்திலே வேலை செய்த போதிலும் நடுயாமத்திலாவது உறக்கம் செய்வாயாக.

**34.சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**
கொடுக்கக்கூடிய அளவு பொருள் ஒத்திருக்குமானால் பிச்சை போட்டுவிட்டு உண்பாயாக.

**35.சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்**
அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கிலே ஒன்றாகிய பொருள் இருந்துவிட்டால் மற்ற மூன்றும் கிடைக்கும்.

**36.சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்**
சோம்பேறி என்று சொல்லப்படுவோர் தேம்பித்திரிவார்கள் அதாவது வறுமையால் வாடி அலைவர்.

**37.தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**
தந்தையின் அறிவுரைதான் முதல் மந்திரம். அவரின் சொல்லுக்கு மேற்பட்ட அறிவுரை எதுவுமில்லை.

**38.தாயிற் சிறந்த ஒரு கோயிலு மில்லை**
தாயைவிடச் சிறந்த ஆலயம் எதுவும் இல்லை. தாயைவிடச் சிறந்த வணங்கத் தகுந்த ஆலயம் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கனி...

மா, பலா, வாழையே
முக்கனிகள் என்பதாம்
ருசி மிகுந்த பழங்களை
நாமும் உண்டு மகிழலாம்
சேர, சோழ, பாண்டியரே
மூவேந்தர் ஆவாராம்
நன்மை செய்த மன்னர் கதை
நாமும்தானே கேட்கலாம்
இயல், இசை, நாடகமே
முத்தமிழும் என்பதாம்
நம் இனிய தாய் மொழியில்
நாமும் அதைக் காணலாம்!...

செல்வி ஜக்சினா யோகராசா
ரூத் மிஷன் - கிளிநொச்சி.

## பொம்மையம்மா பொம்மை..

பொம்மை அம்மா பொம்மை
நான் விளையாடும் பொம்மை
அசைந்து அசைந்து போகும்
அழகு யானைப் பொம்மை
தத்தித் தத்தித் தாவும்
குட்டி முயல் பொம்மை
குட்டிக் கரணம் போடும்
குட்டிக் குரங்குப் பொம்மை
கறுப்புக் கரடிப் பொம்மை
கடக்கு முடக்கின்னு போகும்
கட்டை வண்டிப் பொம்மை
நன்றாய் வாலை ஆட்டும்
நாய்க்குட்டிப் பொம்மை
நான் விளையாடும் பொம்மை!...

செல்வி மௌசிகா மகேந்திரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## பூக்கள்...

சின்னச் சின்னப் பூக்கள்
சிரிக்கும் செவ்வந்திப் பூக்கள்
வண்ணச் சின்னப் பூக்கள்
வாடா மல்லிப் பூக்கள்....

கண்ணைக் கவரும் பூக்கள்
கலப்பு காட்டும் பூக்கள்
விண்ணை விழித்துப் பார்க்கும்
வெள்ளை மல்லிகைப் பூக்கள்...

காலைக் குத்தும் முள்ளாய்
காய்க்கும் நெஞ்சிப் பூக்கள்
கையைக் குத்தும் முள் செடியில்
காண் நீ ரோஜாப் பூக்கள்...

தண்ணீர் மேலே நடமாடும்
தாமரை அல்லிப் பூக்கள்
பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை
பூக்கும் குறிஞ்சிப் பூக்கள்...

அள்ளி மணத்தைக் கொட்டும்
அழகு தாழம் பூக்கள்
வெள்ளைத்தாடித் தாத்தா
விரும்பி வளர்க்கும் பூக்கள்...

உண்ணும் இனிய தேனை
உவந்தே அளிக்கும் பூக்கள்
நலமுடன் வாழ்ந்திட நமக்கே
நன்மை புரியும் பூக்கள்!...

செல்வி.எஸ் சானியா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி-
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவமை பற்றி தெரிந்துகொள்வோம்.....

உவமை (parable) என்பது ஒரு வாக்கியத்தில் வரும் ஒரு விடயத்தை மறைமுகமாக விளக்குதலுக்கு உதவுகிறதுஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையை எடுத்துக் கூறுவது உவமை அணி ஆகும். பலபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையும் காட்டப்படலாம்.

பொருள்களுக்கு இடையே உள்ள பண்பு ஒப்புமை,தொழில் ஒப்புமை, பயன்ஒப்புமை ஆகியவை காரணமாக உவமை அமையும்.ஆகவே அடிப்படையில் பண்பு உவமை, தொழில்உவமை, பயன் உவமை என உவமை மூன்று வகைப்படும்.

உவமைக்கு சில உதாரணங்கள்

அச்சாணியற்ற தேர் போல - உயிர் நாடியற்றது.

அத்தி பூத்தது போல - மிக அரிதாக

ஆண்டிகள் மடம் கட்டியது போல - உருவாகாத திட்டம்

ஆற்றில் கரைத்த புளி போல - பயனற்ற செயல்

கீரியும் பாம்பும் போல - பகை

உயிரும் உடம்பும் போல - ஒற்றுமை

கரடி பிறை கண்டது போல - மிக அரிது

உள்ளீடற்ற புதர் போல - போலி

அடியற்ற மரம் போல - மூலபலமற்றது.

கடன்பட்டார் நெஞ்சம் போல - பதைபதைப்பு

கண்ணுக்கு இமை போல - பாதுகாப்பு

குரங்கின் கை பூமாலை போல - தகுதியில்லாதவர்களுக்கு வழங்குதல்

எலியும் பூனையும் போல - சண்டை

சூரியனை கண்ட பனி போல - மறைதல்

செத்து செத்து எழும் பீனிக்சு போல - அழியாது

வலையில் அகப்பட்ட மான் போல - துடித்தல்

நடுக்கடலில் விடப்பட்ட ஈழ அகதி போல - திக்கு தெரியாமல் தடுமாறுதல்

வேலியே பயிரை மேய்ந்தது போல - பாதுகாக்க வேண்டியதே பாதிப்பாய் அமைதல்

செவிடன் காதில் சங்கு ஊதுவது போல - பிரயோசனமின்மை

ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் - இரண்டு மனம் கொண்டவன்

வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவதுபோல - அறிவற்ற தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழலுக்கு இறைத்த நீர் போல - பயனற்றது
பால்மனம் மாறா குழந்தை போல - வெகுளி
தாமரை இலை தண்ணீர் போல - பற்றற்றது
உடுக்கை இழந்தவன் கைபோல - நட்பு
இடியோசை கேட்ட நாகம் போல - அச்சம், மிரட்சி
சிப்பிக்குள் முத்து போல - மேன்மை
இன்று மலர்ந்த தாமரை போல - சிரித்த முகம்
உள்ளங்கை நெல்லிக்கனி போல - தெளிவு
நகமும் சதையும் போல - ஒற்றுமை
நீர் மேல் எழுத்து போல - நிலையற்ற தன்மை
கிணற்றுத் தவளை போல - உலகை அறியாமை
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல - துன்பத்திற்கு மேல் துன்பம்

## இது தான் இரட்டைக்கிளவி.......

இரட்டைக்கிளவி என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒரு தன்மைப் பட்டு நின்று வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவதாகும். இது இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது.

மசமச என்று நிற்கவில்லை
மடமட என நீரைக் குடித்தார்
மலங்க மலங்க விழித்தான்
மளமள என எல்லாம் நிகழ்ந்தது
மாங்குமாங்கு என்று உழைப்பார்
மாலா முணுமுணுத்தாள்
மொசுமொசு என மயிர்
மொழுமொழு வழுக்கை தலை .
மொறு மொறு என முறுக்கு சுட்டாள்
லபக்கு லபக்கு என முழுங்கினார்
லபலப என்று அடித்துக் கொண்டாள்
லொடலொட என்றும் பேசுவாள்
வடவட என வேர்த்தன கைகள்
வதவத என ஈன்றன குட்டிகள்
கிழவி வழவழ என்று பேசினாள்
விக்கி விக்கி அழுதது குழந்தை
விசுவிசு என்று குளிர் அடித்தது
விறுவிறுப்பான கதையாம்
உடல் வெடவெட என நடுங்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலியும் பாலும்...

செல்வி கீர்த்தனா இலங்கேஸ்வரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

பசி தாங்கமுடியாத இரண்டு எலிகள் தாங்கள் ஒழிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறைய பால் இருப்பதனைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின. இதை அடுத்து இரண்டு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. ஓர் எலி மீது மற்ற எலி ஏறிப் பாலைக் குடித்தது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேலே ஏறிப் பாலைக் குடிக்கலாம் எனத் திட்டமிட்டன.

அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்த போது கீழே இருந்த எலி போதும்...நானும் பால் குடிக்க வேண்டும் எனக் கத்தியது. கீழே இருந்த எலி போட்ட சத்தத்தைக் கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி பால்ப்பானைக்குள் விழுந்துவிட்டது. இதைக்கண்ட மற்ற எலி நல்லது இனி எனக்குத்தான் எல்லாப் பாலும் என்று நினைத்து அந்தப் பானையைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏறமுடியவில்லை. இறுதியில் பசியால் இறந்துவிட்டது. ஆகவே இக்கதையின் மூலம் துன்பத்திலிருந்து விடுதலைபெற மற்றவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்பதனை அறிந்துகொள்வோம்!...

## தாத்தாவின் அறிவுரை...

செல்வி ஜக்சினா யோகராசா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

அன்புச் செல்வங்களுக்குத் தாத்தாவின் அறிவுரைகள். எனதருமைக் குட்டிச் செல்வங்களே!...கடந்தமுறை கல்வி சம்பந்தமாக இந்தத் தாத்தா வழங்கிய அறிவுரைகளைக் கற்று நடந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இன்று ஒழுக்கம் பற்றிப் பார்ப்போம்..

ஒழுக்கம் மனிதருக்கு மிகவும் முக்கியமானது. இது இளமைக்காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.. சிறுவர்களாகிய நீங்கள் நல்ல ஒழுக்கத்தை எப்போதுமே கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தோர்கள் அனைவரையும் மதித்து நடக்க வேண்டும். எப்போதும் உண்மையைப் பேசவேண்டும். பணிவுடன் நடக்க வேண்டும். தீய காரியங்கள் எதிலும் ஈடுபடக்கூடாது. அவ்விதம் வாழ்ந்து பழகினால் நீங்கள் பெரியவர்களாகியதும் ஒழுக்கமுள்ளவர்களாக விளங்குவீர்கள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்புத்தாண்டு...

தமிழர்களாகிய நாம் கொண்டாடும் பல விழாக்களுள் சித்திரை மாதத்தில் வரும் தமிழ்ப் புத்தாண்டும் ஒன்றாகும். உலகில் இருக்கும் அனைவருக்கும் தை மாதம் 1ம் திகதி புதுவருடப் பிறப்பாகும். ஆனால் தமிழர்களாகிய எங்களுக்கும் பௌத்தர்களுக்கும் தமிழ் நாட்காட்டியின் படி சித்திரை மாதம் 1ம் திகதி பிறக்கின்றது இது ஏன்?.. தமிழ்ப் புத்தாண்டு எப்போது பிறக்கும் என்பதைப் பற்றி நான் எழுதப் போகிறேன்.

தமிழர்களுக்குச் சித்திரை மாதமே ஒரு வருடத்தின் முதல் மாதம். இதன் காரணம் 12 மாதங்களுள் இம் மாதத்தில்தான் ஒரு சிறப்பு இருக்கிறது. 12 இராசிகளில் முதல் இராசியான மேட இராசியுடன் சூரியன் சேரும் நேரத்தில்தான் சித்திரை மாதமும் தமிழ்ப் புத்தாண்டும் பிறக்கின்றது.உலகிலுள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் பௌத்த சமயத்தவர்களுக்கும் சித்திரை மாதம் 14 அல்லது 15ம் தேதி தமிழ் சித்திரை மாதமும் தமிழ்ப் புத்தாண்டும் பிறக்கும். இந் நேரத்தைப் புதிய எதிர்பார்ப்புகளுடனும், புதிய ஆசைகளுடனும் நாம் அனைவரும் கொண்டாடுவோம்.

இந்தப் பெருநாளன்று அனைவரும் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, பச்சைக்கற்பூரம், விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழநீர், வெல்லம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம, கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு அனைத்தையும் சேர்த்துச் காய்ச்சி அந்த மருத்து நீரை தலையில் வைத்துக் குளிப்போம். பின்பு பெற்றோர் அல்லது கணவன் வாங்கித்தந்த புத்தாடைகளை அணிந்து பெற்றோரின் மற்றும் உறவினர்களான பெரியோரின் ஆசீர்வாதத்தைப் பெற்று அவர்கள் தரும் கைவிசேஷங்களை வாங்கிக் கொள்வோம்.

புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று வணங்குவோம். அனைவரும் நலம்பெற்று வாழ இறைவனை வேண்டுவோம். பின்பு வீட்டிலும் நட்புகள் வீடுகளிலும் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளை உற்றார் உறவுகள் நட்புக்களுக்குக் கொடுத்து நாமும் ஆனந்தத்துடன் உண்டு மகிழ்வோம். அனைவருக்கும் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு புத்தாண்டு கலை நிகழ்வுகளையும் கண்டு களிப்போம். இந்த நாளும் அனைவருக்கும் நல்ல ஒரு நாளாகும்!...

செல்வி நிவாசினி நித்தியானந்தன்
கல்வி கலாச்சார மன்ற மாணவி
எசன் - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 5

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | | | | 4 |
| 7 | | | | | | | | 5 |
| 8 | | | | 5 | | | | 9 |
| 6 | | 3 | | | | 8 | | |
| 9 | | | | 1 | | | | |
| 2 | | 5 | | | | 3 | | |
| 3 | | | | 7 | | | | 2 |
| 1 | | | | | | | | 8 |
| 4 | | | | | | | | 3 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 94
## (பங்குனி - சித்திரை-2017)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01–08 பங்குனி-8 இவர்களுக்குக் கொண்டாடப்படுவது.

09–12 புலிக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

வ – இ:

08–07 வேகம் என்றும் கூறலாம்.

15–13 இலங்கை நாடு இதனால் சூழப்பட்டுள்ளது.

கீ – மே:

06–02 தமிழர்கள் கல்வியை இந்த உறுப்புக்கு ஒப்பிடுவர்.

15–07 கூரிய ஆயுதம்.

மே – கீ:

01–13 எழுதுகோல் ஆங்கிலத்தில் இப்படியும் அழைப்பர்.

08–16 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள். (குழம்பியுள்ளது)

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையும் மனிதனும்...

செல்வி.சௌமியா நாகராசா
கல்வி கலாச்சார மன்றம்
எசன் - ஜேர்மனி

அனைவருக்கும் இயற்கையும்-மனிதனும் பற்றி எழுதப் போகின்றேன். ஓடும் மேகம், பாடும் காற்று, ஆடும் அலைகடல், பாயும் நதி, தேயும் நிலவு, காயும் கதிரவன், ஓயாது சுற்றும் பூமி. வாரியிறைக்கும் தந்தை. அழகான வானம். என்னிடம் எல்லாம் உண்டு என்று கொக்கரிக்கும் மனிதா.. வீசும் காற்றை மாசுபடுத்துகிறாய். தொழிற்சாலைகளின் கழிவுகளால் இயற்கையை மாசுபடுத்துகிறாய்.. பொல்லாத போர்களால் உயிர் பறிக்கும் இரசாயனக் குண்டுகளை வெடிக்க வைத்து கேடு விளைவிக்கிறாய். இந்த நச்சுக்காற்றை உன் வீட்டுக்குள் உன் நாட்டுக்குள் வீசாமல் வேலிபோட முடியுமா உன்னால்?..வீசிய விஷக்குண்டு உன் எதிரியை அன்று கொன்றால் அதுவே உன்னையும் நின்று கொல்லும். ஆலையின் கழிவு நீரைச் சாலை ஓரம் ஓட விடுகிறாய். அணுக்கழிவுகளை பூமிக்கு அடியில் புதைக்கிறாய்.

வேர், மரம், கிளை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், விதையாக, கல்லாக, மண்ணாக, பொன்னாக எத்தனைவகையாக அள்ளித்தரும் இதை ஏன் மாசுபடுத்துகிறாய். மீனாக, பாலாக, தேனாக, மானாக, முத்தாக, இரத்தினமாக, எத்தனை கனிப்பொருளாக அள்ளித்தரும் இயற்கையை மாசு படுத்துகிறீர்கள். செயற்கையான இரசாயனப் பொருட்களைப் பூமிக்குள் புதைக்கிறீர்கள். பொன்விளையும் பூமி கந்தகப் பூமியாகின்றது. மண்ணாகிப் போகும் மானிடமே மண்ணை மண்ணாக்காதீர்கள்.

யுத்த வேள்வி செய்து வான் வெளியை அழித்துவிட்டு இன்று வானத்தைப் பார்த்து ஏங்குகிறோம். மழை வராதா என்று தவிக்கிறோம். ஓசோனில் ஓட்டை, பருவமாற்றக் காலநிலை, உருவிழந்த உயிரினங்கள், புதிய புதிய நோய்கள் இப்படி எத்தனை அழிவுகள். இயற்கையைச் செயற்கையாக்கும் மனிதர்களே!..இயற்கையைப் பாதுகாக்க ஒன்று சேர வேண்டும். ஆழி அலை பொங்கி எழுந்தால் அமைதியான பூமி ஒரு நிமிடம் ஆடினால், வீசும் காற்று தன் வேகத்தைக் காட்டினால், ஓடும் கங்கை பொங்கி எழுந்தால் என்னவாகும் சாவுதான் மனிதா!.. ஆகவே இயற்கையை நேசிக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் இயற்கையோடு ஒன்றி வாழவேண்டும். இயற்கை எய்தும்வரை இயற்கையோடு இணைந்து இனிமையாக வாழ்வோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு!....

செல்வி நிசா முருகானந்தன்
றீத் மிஷன் - கிளிநொச்சி.

-முதலையின் அடிவயிற்றுப் பகுதியின் தோலில் இருந்தே குண்டுதுழைக்காத உடை தயாரிக்கப்படுகின்றது.
-இரண்டு தேசியகீதங்களைக் கொண்ட நாடு அவுஸ்திரேலியா.
-இங்கிலாந்து நாட்டின் தேசிய சின்னம் ரோஜா.
-இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரம் துளசியும் அரசமரமும்தான்.
-93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகிப் புத்தக உலகில் சாதனை படைத்த "கெரி போட்டர்" புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்தின் பெண் எழுத்தாளரான ஜே.கே.ரோலிங் என்பவர்.

## தெரிந்துகொள்வோம்!...

செல்வி மௌசிகா மகேந்திரன்
றீத் மிஷன் - கிளிநொச்சி.

-கண்கள் இருந்தும் பார்வை இல்லாத ஒரே பாலூட்டி - வௌவால்.
-இங்கிலாந்து நாட்டின் முதல் பெண் பிரதமர் - மார்க்ரெட் தட்சர்.
-டென்மார்க் நாட்டின் தேசியப்பறவை - வானம்பாடி.
-மூளைக்காய்ச்சலை பரப்பும் விலங்குகளில் ஒன்று - பன்றி.
-உலகின் அதிகமாக விளைவிக்கப்படும் தானியம் - கோதுமை.
-இந்தியாவில் அதிக சினிமா தியேட்டர்கள் உள்ள மாநிலம் - ஆந்திரா.
-வானவில் தோன்றி மறையும் நிமிடம் - 3 நிமிடம்.
-பெரும்பான்மையாக காது மடல் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் பிராணிகள்
-குட்டிபோடக்கூடிய பாலூட்டி-
-காது மடல் வெளியே தெரியாத பிராணி - முட்டையிடக்கூடியவை.
-சீரிஸ் நட்சத்திரம் என்றழைக்கப்படுவது - நாய் நட்சத்திரம்.
-பிளாஸ்டிக் பாலம் கட்டியுள்ள நாடு - ஸ்கொட்லாந்து.
-பாலைவனங்களில் காணப்படும் செடிவகை - காக்டஸ்.
-ஒரே இடத்தில் நின்று பறக்கும் ஆற்றலுடையபூச்சி - தட்டாம்பூச்சி.
-பென்சில் செய்ய உதவும் மரங்கள் -அன்பர்ஸிமரம், ஆடலரசு.
-மின்கம்பங்கள்செய்யஉதவிடும்மரங்கள்.குங்குலியம்,தேக்கு,சவுக்கு,கருமருது
-ரயில் பெட்டி செய்ய உதவிடும் மரங்கள்-வாகை, வேங்கை.
-படகு செய்ய உதவிடும் மரங்கள் - பெருமரம், இலவுமரம், ஆடலரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 27 பாடசாலைகளில் ஒரேயொரு ஆசிரியர்

2016ஆம் ம் ஆண்டிற்கான புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 27 பாடசாலைகள் ஒரேயொரு ஆசிரியருடன் இயங்கி வருவது கண்டறியப்பட்டுள்ள நிலையில் 1500 பாடசாலைகள் 50க்கு குறைவான மாணவர்களுடன் இருப்பதும் தெரியவந்துள்ளது.

அமைச்சின் இந்த சமீபத்திய ஆய்வறிக்கையின்படி இலங்கையில் 2 ஆசிரியர்கள் கொண்ட 108 பாடசாலைகளும் , 3-5 வரையிலான ஆசிரியர்களுடன் 801 பாடசாலைகளும் இயங்கி வருவதாக அறியப்படுகின்றது.

குறிப்பாக வவுனியா, பதுளை, கேகாலை, பிராந்தியங்களில் 1-15 வரையிலான மாணவர்களே இருப்பதாக கண்டறிந்துள்ளார்கள் . இன்றைய நிலையில் 250 பாடசாலைகள் 15 அல்லது அதற்குக் குறைவான பிள்ளைகளைக் கொண்டுள்ளன.

522 பாடசாலைகள் 30க்குக் குறைவான பிள்ளைகளோடு நடாத்தப்படுகின்றன யாழ்ப்பாணம் உட்பட இரத்தினபுரி, கேகாலை, குருநாகல, அனுராதபுரம், கண்டி, பதுளை, நுவரெலிய மாவட்டங்களில் 100க்கு குறையாத பிள்ளைகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

## யாழ் பல்கலைக்கழகம்....

யாழ்.பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் இந்த வருடம் 2151 மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். மேற்படி 32வது பட்டமளிப்பு விழா தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கு 2305 மாணவர்கள் புதிதாக உள்வாங்கப்படவுள்ளனர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு கடந்த 2015 ம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய 2305 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாட்ஸ் அப், பேஸ்புக்! தமிழ் வார்த்தைகள் தெரியுமா உங்களுக்கு?

நாம் தினமும் பேஸ்புக், வாட்ஸ் அப் பயன்படுத்துவோம், ஆனால் அதற்கான தமிழ் வார்த்தைகள் உங்களுக்கு தெரியுமா?

whatsApp - புலனம்
Facebook - முகநூல்
Youtube - வலையொளி
Instagram - படவரி
WeChat - அளாவி
Messanger - பற்றியம்
Twitter - கீச்சகம்
Telegram - தொலைவரி
Skype - காயலை
Bluetooth - ஊடலை
WiFi - அருகலை
Hotspot - பகிரலை
Broadband - ஆலலை
advertisement
Online - இயங்கலை
Offline - முடக்கலை
Thumbdrive - விரலி
Hard disk - வன்தட்டு
Battery - மின்கலம்
GPS - தடங்காட்டி
CCTV - மறைகாணி
OCR - எழுத்துணரி
LED - ஒளிர்விமுனை
3D - முத்திரட்சி
2D - இருதிரட்சி
Projector - ஒளிவீச்சி
Printer - அச்சுப்பொறி
Scanner - வருடி
Smartphone - திறன்பேசி
Sim Card - செறிவட்டை
Charger - மின்னூக்கி
Digital - எண்மின்
Cyber - மின்வெளி
Router - திசைவி
Selfie - தம்படம்
Thumbnail - சிறுபடம்
Meme - போன்மி
Print Screen - திரைப்பிடிப்பு
Inkjet - மைவீச்சு
Laser - சீரொளி

### பகிர்வு...

ஈழமும் தமிழும் யாழ்ப்பாண இராச்சியத்தை அரசாண்ட பரராசசேகரன் என்னும் மன்னன் பல அறிஞர்களை ஒன்றுதிரட்டி பரராசசேகரம் என்னும் பாரிய வைத்திய நூலைத் தொகுத்துள்ளான் என்று தெரியவருகின்றது. இந்நாலிலே 12.000 பாடல்களுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. கம்பராயாமாயணத்திலும் ஏறத்தாழ இந்தளவு எண்ணிக்கையான பாடலக்களே காணப்படுகின்றன என்னும்போது பராராசசேகரம் நூலின் பிரமாண்டம் எமக்குப் புலப்படும்.

நன்றி: - """ஞானம்""" இணைய சஞ்சிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

தவம்: –

261. உற்றநோய் நோற்றல் உயிர்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

262. தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

263. துறந்தார்க்குத் துப்பரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

266. தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (பொருள்)

261 தனக்கு உண்டாகும் நோய்களைப் பொறுத்துக்கொண்டு, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருப்பதே தவத்திற்கு ஏற்ற தன்மையாகும்.

262. முன்னாளில் நல்வினை செய்தவர்களே தவம் செய்யத் தக்கவர்கள்.. நல்வினை செய்யாதவர்கள் தவம் செய்ய முயல்வது வீண் ஆகும்.

263. துறவிகளுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதனாலேயே இல்லறத்தினர் தவம் செய்வதை மறந்தனர்.

264. தவத்தைக் கெடுக்கும் பகைவர் அழிதலையும், தவத்தைவிருப்பினவர் உயர்தலையும் நினைத்துப் பார்க்க அது தவத்தின் பயனே என்பதாகும்

265. விரும்பினவற்றை விரும்பியபடியே அடைவதால் தவம் செய்வதை இப்பிறவியில் செய்ய முயலவேண்டும்.

266. தவத்தைச் செய்பவர்கள் தம் செயலாகிய நன்மையையே செய்வார்கள். மற்றவர்கள் ஆசையுள் அகப்பட்டுப் பயனற்றதையே செய்வார்கள்.

267. பொன் சுடச்சுட ஒளி தருவது போலத் துன்பம் வருத்த வருத்தத் தவம் செய்பவருக்கு ஞானம் பெருகும்.

268. தவம் செய்பவன் "தான்" என்னும்அகந்தையைநீக்கிவிடுவானேயானால் மற்ற நிலை பெற்ற உயிர்கள் எல்லாம் அவனை வணங்கும்.

269. தவத்தினால் சிறந்த வலிமை பெற்றவர்கள் உயிரைக் கவரும் இயமனிடமிருந்து தப்பிக்கவும் முடியும்.

270. உலகில் செல்வர்கள் சிலராகவும், வறிஞர்கள் பலராகவும் இருக்கக் காரணம் தவம் செய்பவர்கள் சிலராகவும் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதனாலே ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## சொரணை:-

நெருஞ்சிப்புல் வருகிறவர் போகிறவர் கால்களை எல்லாம் தன் முள்ளினால் குத்திப் புண்ணாக்கிக் கொண்டிருந்தது. "மனிதர்களின் காலைக் குத்தி அவர்களுக்குச் சினத்தை உண்டாக்குகிறாயே...பார்...பார்...அவர்கள் என்றோ ஒரு நாள் வேரோடு உன்னைப் பிடுங்கி எங்காவது பயிர்களுக்கு எருவாய்ப் புதைத்துவிடப் போகிறார்கள்" என்றது அறுகம்புல். நெருஞ்சிப்புல் சூடானது. "என்னைக் காலால் மிதித்து வதைக்கிறவர்களை எல்லாம் நான் தாங்கிக்கொள்ள வேண்டுமாக்கும்" நெருஞ்சிப்புல் சொன்னது..

"வதைபடுவதை விட புதைபடுவது மேல்"

## உய்வு:-

காற்றாடி நூலின் துணையோடு உயர்ந்து..உயர்ந்து.. வானின் உச்சியில் ஏறியது. "பார்த்தீர்களா...நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்" என்று தன் பெருமையைப் பறை சாற்றியது. பழைய வரலாற்றை அடியோடு மறந்தது காற்றாடி. நூல் இனி எதற்கு என்று கூறிக்கொண்டே நூலைப் பட்டென்று அது அறுத்துக்கொண்டது.

கொஞ்ச நேரத்தில் ஊரின் மூலையில் ஒரு முள் மரத்தில் விழுந்து கிழிந்து உருக்குலைந்து கிடந்தது காற்றாடி. காற்றாடியின் கதை தெரிந்த முள் மரம் சொன்னது..

"ஏற்றி வைக்கிறவனை மறக்கிறவன்
இறக்கி வைக்கப்படுவான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம் உளமாற்றத்திற்குரிய காலம்.....

திருமதிஜெயா நடேசன் – ஜேர்மனி.

திருச்சபையின் வழிபாடுகள் ஐந்து பெரும் ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பல காலங்களாக முதல் ஞாயிறு வாரத்தோடு ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்த்து அனைத்துலக அரசர் பெருவிழாவோடு நிறைவடைகிறது. திருவருகைக்காலம், கிறிஸ்த்து பிறப்புக்காலம், பொதுக்காலம், தவக்காலம், பாஸ்காலம், மீண்டும் பொதுக்காலம் என்று திருச்சபையின் வழிபாடுகள் ஒரு ஒழுங்கு முறையில் முன்னெடுத்து வருகின்றது.

தவக்காலம் திருநாற்றுப் புதனோடு ஆரம்பிக்கப்பட்டு குருத்து ஞாயிறு வரையுமுள்ள காலத்தையும் குருத்து ஞாயிறு இருந்து பாஸ்கா ஞாயிறுவரை உள்ள புனித வாரத்தையும் கொண்டதாக தவக்காலம் அமைகின்றது. இத்தவக்காலம் ஒப்பரவின் காலம் என்றும் மனமாற்றத்தின்காலம் என்றும் அழைக்கப்படுகின்றது. பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்து ஒவ்வொரு இறைவனுக்கும் எமக்குமிடையே உள்ள உன்னதமான உறவை நாம் இழந்து வாழ்ந்து வருகிறோம். வானகத் தந்தைக்கும் எமக்கும் இடையே இருக்கும் அப்பா-பிள்ளைகள் என்ற புனிதமான தொடர்பு நாம் பாவத்திற்குள்ளே வாழ்ந்து வருவதினால் முறிவடைகின்றது.

எமக்காக மனித அவதாரம் எடுத்த இறைமகன் யேசு கூட பாவம் தவிர அற்ற அனைத்திலும் எம்மைப்போலிருந்தார். நாற்பது நாட்கள் உண்ணா நோன்பு இருந்து செபத்துக்குள் வாழ்ந்து வானகத் தந்தையோடு ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தினார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவராக அதே ஆவியால் வழிநடத்தப்பட்டார். இத்தவக்காலத்தில் நாம் பாவச் சோதனையிலிருந்து வெற்றி பெற இறைவன் நமக்கு ஆற்றலையும் அருளையும் தருகிறார் என்று விழிப்போடு செப, தவ, தான, தருமத்தில் நிலைத்திருப்போம்.

இப்புனித தவக்காலத்தில் இறைவன் யேசுவின் துன்பம் நிறைந்த பாடுகளை நாம் தியானிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், எமது அன்றாட வாழ்வில் முகம் கொடுக்கும் அனைத்துத் துன்பங்களையும் வேதனைகளையும் இழப்புக்களையும் எமது வாழ்வின் சிலுவைகளாக ஏற்றுக்கொண்டு பொறுமையோடு தாங்கி நின்று சிலுவை சுமக்கும் யேசுவோடு கூட வழி நடப்போம். இத்தவக்காலத்தில் செப, தப, தான, தருமங்களைச் செய்து நாமும் புதுப்பிறப்படைந்து மற்றவர்களையும் புதுப்பித்து பாஸ்கா விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-156
## (பங்குனி-சித்திரை-2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-07 அகில உலகப் பெண்களுக்காகக் கொண்டாடப்படும் நாள்.
32-35 ஒரு உருவம்.
43-46 ஒரு ஆடை வகை.
46-49 நாட்களில் ஒன்று.

**வ-இ**

14-12 சாதனை புரிதல் சரித்திரம் படைத்தல் எனலாம்.
28-24 இறுக்கமான பொருள் எனலாம்.
32-30 தென்னையின் கன்று தென்னம்பிள்ளை போல் பனையின் பிள்ளைஇது.
42-37 பூ ஒன்று.

**கீ-மே**

24-03 காய்கறி வகைகளில் ஒன்று.
28-07 கல்வியில் ஒரு பாடம்.
43-29 மூத்தவர் ஆற்றில், நடுவிலார் புற்றில், இளையவர் வீட்டில் இவர்யார்.
46-04 வாழ்வியலுக்கு வழிவகுத்தவர்.

**மே-கீ**

01-22 இலங்கையில் வறண்ட மாவட்டம் இது.
02-23 ஏழைகளின் வாழ்வு இதில் என்றும் கூறுவர்.
05-19 1985 அனைத்து இயக்கத் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேச்சு வார்த்தை நடாத்திய இடம்.
20-41 நன்றாகப் படித்தால்தான் இது பெறமுடியும்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்....
(பங்குனி- சித்திரை மாதம்)

## இலங்கை

02.03.1991-இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணம் மனித வெடிகுண்டு தாக்குதலில் கொல்லப்பட்டார்.
10.03.1997-திருகோணமலை சீனன்குடா விமானத்தளம்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல். விமானபிரங்கித்தாக்கி அழிக்கப்பட்டது.
21.03.1984-மணலாறு பிரதேசத்திலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்ட நாள்.
22.03.1965-தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக்கட்சி டட்லி சேனநாயக்கா அரசமைத்தார்.
24.03.1990-தமிழ்ப் பிரதேசங்களைவிட்டு இந்திய அமைதிப்படை முற்றாக வெளியேறியநாள்.
24.03.1965-டட்லி-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட நாள்.
25.03.1984-பருத்தித்துறை பொலிஸ் நிலையம் தாக்கியழிக்கப்பட்ட நாள்.
26.03.1984-விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான"குரல்" இதழ் முதற்தடவையாக வெளியிடப்பட்டது.

05.04.1981-குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.
07.04.1978-பொலிஸ் அதிபர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் முருங்கன் காட்டுப் பகுதியில் போராளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
09.04.1984-யாழ் புனித அடைக்கலமாதா கோவில் இலங்கைப் படையினரால் ரொக்கட் தாக்குதலில் அழிவுற்றது.
10.04.1985-திம்பு பேச்சு வார்த்தை ஆரம்பத்த நாள்.
10.04.1985-யாழ் பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டது.
14.04.00 -தமிழ் - சிங்கள புதுவருடம்.
18.04.1958-பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட நாள்.
19.04.1988-அன்னைபூபதி நினைவு நாள் (03.11.1932-19.04.1988)
20.04.1883-கண்டியில் முதற் கத்தோலிக்க மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது
22.04.2000-240 வருடகால அடிமைச்சின்னமாக விளங்கிய ஆனையிறவு படைமுகாம் விடுதலைப்புலிகளால் வெற்றிகொண்டநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில பிரபலங்கள்...

07.03.1990-கவியோகி சத்தானந்த பாரதியார் நினைவுநாள்(11.05.1897-07.03.1990)
08.03.1892-சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் நினைவுநாள் (1854-08.03.1892)
10.03.1955-ஆங்கிலேய தமிழறிஞர் எல்லீஸ் நினைவுதினம்.
22.03.1952 இலங்கையின் முதல் பிரதமர் டிஎஸ் செனநாயக்கா நினைவுநாள்

15.04.1960-கொழும்பின் முன்னாள் மேஜர் உருத்திரா நினைவுநாள்.
23.04.1942-உ.வே.சாமிநாதையர் நினைவுநாள்.
23.04.1993-பாதுகாப்பு, வர்த்தக அமைச்சர் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்ட நாள்.
24.04.1820-ஆங்கிலேய தமிழறிஞர் வண ஜி யூ போப்பையா பிறந்ததினம். திருக்குறள், திருவாசகம் இவற்றை ஆங்கிலத்தில் முதன்முதல் மொழிபெயர்த்தவர் இவர்தான். (1820-1908)
26.04.1971-தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வா நினைவு நாள் (31.03.1898-26.04.1971)
30.04.1961-தமிழறிஞர் வணக்கத்துக்குரிய லோங் அடிகளார் நினைவுநாள் (24.04.1896-30.04.1961)

## உலக நடப்புக்கள் சில....

08.03.00-அனைத்துலக பெண்கள் தினம்.
11.03.1949-வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (NATO) உருவாக்கப்பட்ட நாள்.
12.03.1957-ஐரோப்பிய யூனியன் உருவாக்கப்பட்ட நாள்.
16.03.1941-ஜப்பானிய விமானப் படைகள் அமெரிக்கா-பேர்ள் துறைமுகம்மீது தாக்குதல் நடத்தப்பட்ட நாள்.
18.03.1851-உலகின் முதன் முதல் கண்காட்சி இங்கிலாந்தில் நடைபெற்றது. 6 மில்லியன் மக்கள் கலந்துகொண்டனர்.
22.03.00-உலக நீர்த்தினம்.
24.03. -பிரித்தானியா அரசி 2வது எலிசபெத் முடிசூடிய தினம்.
29.03.1953-எவெரெட்ஸ் சிகரத்தில் ஏறி மனிதனால் வெற்றிகொள்ளப்பட்டநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.04.00-உலக முட்டாள் தினம் (ஏப்ரல் பூல்)
06.04.1909-வடதுருவத்திற்குச் சென்ற முதல் மனிதன் றொபேட் பெரி என்ற அமெரிக்கர் இன்னொரு அமெரிக்கரோடு சென்றார்.
14.04.1863-பிரித்தானியாவில் முதன் முதல் நிலக்கீழ் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது.
14.04.00-பெரிய வெள்ளி நாள்.
16.04.00-உயிர்த்த ஞாயிறு நாள்.
16.04.1922-சோவியத் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட நாள்.
19.04.1421-சீனாவின் பீக்கிங் நகரம் தலைநகராக்கப்பட்ட நாள்.
22.04.00-சர்வதேச பூகோள தினம்.
22.04.1938-2வது உலக யுத்தத்தின்போது முதன் முதல் யுத்தகாலத்தில் ரெட்பரோன் என்னும் விமானத்தை ஜேர்மனி பயன்படுத்தியது.

## உலகில் சில பிரபலங்கள்... (பங்குனி-சித்திரை)

01.03.1910-பாடகர் எம்.கே தியாகராசபகவதர் பிறந்ததினம்.
02.03.2005-பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் நினைவுதினம்.
03.03.1959-சோவியத் அதிபர் ஜோசப் ஸ்ராலின் நினைவுநாள் (1879-1959)
04.03.1519-இத்தாலி பிரபல ஓவியர் லியானார்டோ டாவின்ஸி நினைவுதினம்.
07.03.1965-இங்கிலாந்து பிரதமர் வின்சன் சேச்சில் நினைவுதினம்(1874-1965)
11.03.1955-பென்சிலினை கண்டுபிடித்த சேர் அலெக்ஸாண்டர் பிளேமிங் நினைவுதினம்(06.08.1881-11.03.1955)
14.03.1883-கம்யூனிசத்தின் தந்தை ஜேர்மனியர் கார்ல் மாக்ஸ் நினைவுதினம் (1818-14.03.1883)
18.03.1886-இந்திய பெருஞானி சிறீ ராமகிருஷ்ண பரமகம்சர் நினைவுதினம்.
22.03.1845-எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்த ஜேர்மனிய விஞ்ஞானி வில்லியம் றொன்ற்ஜென் பிறந்ததினம் (22.03.1845-10.02.1923)
23.03.1931-இந்திய விடுதலை வீரன் பகத்சிங் நினைவுதினம்(28.10.1907-23.03.1931)
25.03.1090-இராஜஇராச சோழன் நினைவுநாள்.
26.03.1680-வீர மன்னர் சிவாஜி நினைவுநாள் (1627-1680)

04.04.1968-அமெரிக்க கறுப்பினத்தவர்களின் விடுதலை வீரன் மாட்டின் லூதர் கிங் நினைவுநாள்.
04.04.1865-அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் நினைவுநாள்(1809-1865)
12.04.1945-அமெரிக ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட் நினைவுநாள்(1882-1945)
13.04.1970-பிரான்ஸ் ஜனாதிபதி சாள்ஸ் துகோல் நினைவுநாள் (1890-1970)
15.04.1847-மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் பிறந்தநாள் 15.04.1847-18.10.1931)
16.04.1350-யூத இனத்தின் தீர்க்கதரிசி மோசஸ் நினைவுநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.04.1882-மனித இனம் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி கண்டது என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானி சார்ள்ஸ் டார்வின் நினைவுநாள்.
21.04.1926-பிரித்தானியா 2ம் எலிசபெத் மகாராணி பிறந்தநாள்.
21.04.1964-பாவேந்தர் பாரதிதாசன் நினைவுநாள் (29.04.1891-21.04.1964)
23.04.1566-உலகப்புகழ்பெற்ற நாடக ஆசிரியர் இங்கிலாந்து நாட்டவரான சேக்ஸ்பியர் பிறந்தநாள் (23.04.1566-0.04.1616)
30.04.1945-ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்வ் கிட்லர் நினைவுநாள்(1882-1945)

## கண்டுபிடிப்புகள்..

02.03.1793-பறக்கும் பலூனை முதன் முதலில் கண்டுபிடித்தார் பிரான்ஸ் நாட்டவரான கொல்வியர்.
04.03.1885-இரு சக்கர வண்டியினை முதன் முதல் கண்டுபிடித்தார் இங்கிலாந்து நாட்டவரான ஸ்டெரி.
17.03.1969-ஒலி, ஒளிப்பதிவு நாடாவை (Video Cassette) முதன் முதல் பிலிப்ஸ் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.
20.03.1895-டீசல் இயந்திரத்தை ஜேர்மனியரான டீசல் என்பவர் கண்டுபிடித்தார்.
23.03.1963-ஒலியினைப் பதிவு செய்து வைக்கக்கூடிய (Audio Cassette) பிலிப்ஸ் நிறுவனம் கண்டுபிடித்தது.
31.03.1972-மனிதவாழ்வில் பல்வேறு வடிவில் புகுந்துகொண்ட கொம்பக்ட் டிஸ்க் (Compact Disc) RCA என்ற அமெரிக்க நிறுவனம் அறிமுகம் செய்தது.

06.04.1908-சைலன்ஸ் துப்பாக்கியை முதன் முதல் கண்டுபிடித்தார் அமெரிக்க நாட்டவரான கெராம் ஸ்டீவன்.
08.04.1800-மின்கலத்தை (Electric Battery) இத்தாலி நாட்டவரான வோல்டர் என்பவர் கண்டறிந்தார்.
15.04.1776-பிரித்தானிய கடலோடி ஜேம்ஸ் குக் என்பவர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளையும் தீவுகளையும் கண்டறிந்தார்.
27.04.1769-நீராவியில் இயங்கும் இயந்திரத்தை இங்கிலாந்து விஞ்ஞானி ஜேம்ஸ் வாட் என்பவர் வடிவமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கமும் அழிவும் பெண்ணாலே!...



அடக்கி அடக்கி வைத்தாலும்
அணையை உடைத்து பாயும்
ஆற்று நீர் போலே
அடக்கு முறையில் பெண்களை
அடக்கி ஆழும் உலகிலும்
கள்ளிப் பால் ஊற்றிப் பெண்களை
அழிக்கும் நாடுகளிலும் கூட
பெண்ணின் பெருமை பேசக்
கூடியதாக
பெண் உயர்ந்தே நிற்கின்றாள்
தமிழை வளர்த்த பெருமைக்கு
இலக்கியத்தில் ஒரு ஒளவை
விண்வெளி சென்ற முதல்
பெண்மணி கல்பனா
பாரத ரத்தினா விருது பெற்ற
இந்திராகாந்தி
மகசேசே விருது பெற்ற கருணையின்
இருப்பிடமாம் அன்னை தெரேசா
இப்படி பலர் பெண்ணின் பெருமையை
சொல்லிச் செல்கையில்
இன்று சட்ட துறையிலும்
காவல் துறையிலும்
அரசியலிலும் வெள்ளித் திரையிலும்
சின்னத் திரையிலும்
எங்கும் பெண்களே
மின்னும் நட்சத்திரமாய்
மேலோங்கி வளர்ந்து
பெண் என்பவளே ஆக்கவும்
அழிக்கவும் சக்தியானாள்
என்று சொல்லாமல் சொல்லி
நிற்பதுதான் உண்மை
மகளாய் காதலியாய் சகோதரியாய்
நண்பியாய் மனைவியாய் தாயாய்
யாதுமாகி நிற்பவளே பெண்
கருவில் உனை சுமக்கவும்
பசிக்கு உணவை ஊட்டவும்
இரத்தத்தை பாலாய் கொடுக்கவும்
பெண்ணால் மட்டுமே முடியும்
பெண் இல்லா வீடும் பாழ்
பெண் இல்லாத நாடும் பாழ்
அன்பின் இருப்பிடம் அன்னை
ஆக்கத்தின் இருப்பிடமும் அவளே
அண்ட சாகாசரங்களும்
ஆழும் சக்தியும்
அன்னை ஆதி பரா சக்தியே
பெண்ணே உன் சக்தியை
அறியாதவன்
வெறும் மூடன்!...வெறும் மூடன்!...

கவி-மீனா-ஜெர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய நம்பிக்கைகள்......

விடியலுலகிலே வெற்றி விதையலே
முடியுமென்றிடும் முனைப்பின் கதிர்களே
ஆற்றும் செயல்களின் அத்திவாரங்கள்
வெற்றி தோல்விகள் விளையும் நாற்றுக்கள்
வீறுகொள்வதே நம்மில் நம்பிக்கை
வேண்டும் விளைவுகள் வானை முட்டனும்
வெளியுலகின் சாதனைக் கதவைத் தட்டனும்
அசையா வேரென ஆணிவேர்களும்
பட்டறிவுப்பாதையின் பகிர்வின் உச்சமும்
நாளைய நம்பிக்கை நாற்றை விதைக்கனும்
முடியும் என்பதே முடிவாய்ப் பூக்கனும்
அடையும் இலக்கிலே அசையாநம்பிக்கை
விடையாய்ப் பெற்றிட விரைந்தகாலமும்
விதைப்பின் காலமும் நிமிர்ந்த தூண்களாய்
எதிர்கொள் புரட்சிக்கு ஏணியாகணும்
இலக்கின் பாதையில்
இலட்சியம் பொறிக்கணும்
நாளைய நம்பிக்கை நாற்றை விதைத்திட
இன்றைய செதுக்கலின் திருப்புமுனைகளே
பொறியாய்ப்பூக்கும் புதுயுகம் நோக்கும்......

வசந்தா ஜெகதீசன் – ஜேர்மனி

## பேதமையகற்று பெண்ணே---

நெடிதுயர் வீசிடும் பேதமை
நிமிர்ந்துயர் பார்வையில் விலத்து
கற்றிடும் ஆற்றலில் தகுதி
கடமையில் சரிநிகர் சமமென்ற பதவி
பெற்றுயர் பேறுகள் நிறுவி
பேதமை அகற்றிடு பெண்ணே
அச்சத்தின் வேரினைக் களைந்து
உச்சத்தை தொடுவதே உழைப்பு
உன்னாலே முடியும் துணிந்து
உயர்வினை அடைவது இலக்கு
நம்பிக்கை வேரே உறுதி
நாளும் உன் கடமைகள் மிகுதி
நாளைய உலகே வானம்
எட்டியே தொடுவது திண்ணம்
வேடிக்கை பேச்சுகள் விலத்து
வீணான பொழுதினை துரத்து
பேதமை என்றிடும் சிறுமை
பேச்சுக்கும் வேண்டாமே அகற்று
அகற்றி நீ உயர்வதே ஆற்றல்
அவனிக்குள் மனிதமே போற்றல்.

வசந்தா ஜெகதீசன் – ஜேர்மனி

## விடியலை நோக்கி....

கரை தொடாத அலையாய் தடுமாறுகிறாய்
கனவுகளுக்குள்கோட்டைகட்டுகிறாய்
நிஜமாக்கும் முயற்சி உனக்குள்ளே
தன்நம்பிக்கை கொண்டு
தடைகளை அகற்று
பாரதியும் சாரதியும் வந்தாலும் தடை நீயே-
உன் முயற்சி இன்றி விடியல்கள்தோன்றாது
மண்ணுள் விதையும் முட்டையுள்
குஞ்சும்முட்டி மோதியே
விடியல் காண்கிறது
மேடும்பள்ளமும்பூமிஎங்கணும் உண்டு
மீன் குஞ்சுக்கு நீச்சல் கற்றுத்தருவதில்லை
நீ மட்டும் காரணங்கள் காட்டுகிறாய்
ஆனந்த விடியல் உனக்குள்ளே
ஆதவன்ஒளியும் காரின் பொழிவும்
அவனியில் மனிதர் யாவர்க்கும் பொதுவே
அறியாமைக் கூட்டை விட்டு அகன்றிடு
சுதந்திர வானில் சிறகை விரி
மங்கை நீயே மகத்தான சக்தி
உயிர்களைத்தரும்ஓங்கிய நெருப்பு
உனக்குள்ளேஒளிவிரவிக் கிடக்கிறது
திரையினை விலக்கி விடியலை நோக்கு!...

கீத்தா
பரமானந்தன் – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓங்கட்டும்!.

செல்விஎஸ். சானியா
றீத் மிஷன் – கிளிநொச்சி

பேதையாக பிறந்த நீ
மேதையாகவும் மாறியிருக்கிறாய்
போதையாகவும் மாறியிருக்கிறாய்
இல்லாளாய் இருந்த நீ
வில்லாளாவும் தோன்றியிருக்கிறாய்
கள்ளாளாகவும் மாறியிருக்கிறாய்
வாசலுக்கு வரமுடியாமல் இருந்த நீ
வானத்திலும் ஏறிவிட்டாய்
மானத்தையும் மீறிவிட்டாய்
பிள்ளைபெறும் இயந்திரமான நீ
மண்ணைக் கொள்ளும் மந்திரங்கள்
கற்றாய் கண்ணைக் கொல்லும்
தந்திரங்கள் பெற்றாய்!...

தலையணையாய் இருந்த நீ
தடைகளை வெல்லும்
படையிலும் சிறந்தாய்
தசைகள் விற்கும்
கடையிலும் சிறந்தாய்
பிறந்தவுடன் கொல்லப்பட்ட நீ
சிறந்து திருவாகவும் சாற்றப் படுகிறாய்
கல்வி மறுக்கப்பட்ட நீ
துறைகள் தோறும் பொலிவாகிறாய்
திரைகள் நாறும் மலிவாகும் நீ
தீட்டாயும் கருதப்படுகிறாய்
உன் பொறுமையால் போற்றப்படும் நீ
சிறுமையால் தூற்றப்படுகிறாய்
பெண்ணே நீ இனி
சுயம் கூடி வாழ்ந்தால்–எல்லாவற்றிலும்
பாதிபோல் வாழ்வாய்
நயம் நாடி வாழ்ந்தால்
நீ உயர்ந்தே வாழ்வாய்!....

## ஓ கனடா அகதி.....

மட்டுவில் ஞானக்குமரன்
கனடா.

பளபளக்கும் பளிங்குத்தரையில்
சிதறியிருக்கும்
ஒரு அகதியின் கண்ணீர்த்துளி
சிரியனோ ஈராக்கியனோ
ஈழத்தமிழனோஎவனதோ யாரறிவார்
ஒவ்வொருகண்ணீர்த் துளிக்குள்ளும்
ஏராளம் வலியிருக்கும்
வென்னீர் போல தகிக்கும் இந்த
கண்ணீர்த்துளிகளை
எவர் வந்து உடைத்து வாசிப்பார்
தீ எரியும் உணவுச்சாலைக்குள்
நடுங்கும் உறைபனிக் குளிருக்குள்
உழைப்பை நெய்யாக்கி
ஊற்றிக்கொண்டிருக்கிறான்
முன்னே நிர்கதியாய் இங்கே
வந்தவனின் பிள்ளைகள்
இப்போ வருபவனை
அகதியென இழிக்கிறான்
அடிப்படை சம்பளத்தில்
பூனைபடுத்திருக்கிறது அடுப்படிக்குள்
கோட் சூட் கோடீஸ்வரனின்
சூட்சுமம்தான் தெரியவில்லை
சோளக்காட்டுப் பொம்மை போல
தனியே
உலையில் கொதிக்கும் சிறு நெல்போல
தவிக்கும் மனசுடன்
வீடு வெறிச்சோடிக்கிடக்கும்
இராப்பகல் மூச்சிரைக்க
செய்யும் வேலைக்கு
நாலு மணி நேரமே தூக்கம்
மீதி நேர வேலை
மனையாளை நினைத்து
குழந்தையை அணைத்து காணும்
கனவுலகில் தூக்கமேது
ஆகாயம் தீப்பிடிக்க நிலாத்தூங்குமா!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையராய்ப் பிறப்பதற்கு . . .


டாக்டர் எழில்வேந்தன்
தமிழ்நாடு.

மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமென்றாய்.
ஊர் உலகில் எம் நிலைமை உரைக்கும் தரமாமோ?
உன்னளவில் என் நிலைமை உணர்வாயா.. தொழவன்!
உன் வீட்டுக்கு விளக்கேற்ற நான் லஷ்மியாய் வரணும்.
உன் பாதத்தில் எரியும் கற்பின் புனித கற்பூரம் ஆகணும்.
உன் கண்ணுக்கு மட்டும் அழகு குறையாத காம லஷ்மியாய் இருக்கணும்.
அந்நியஆண்களின் பார்வைபடாமல் நெருப்பாகக் கக்கும் எரிமலை ஆகணும்.
தாயினும் சொலப்பரிந்து நான் அமுதூட்டணும்
உன் எச்சிலின் மிச்சம் எனக்கு அமுதம் ஆகணும்.
உன்விருந்தினர் வந்தால் என் முகம் எப்போதும்
பிளாஸ்டிக்பூவாய்மலர்ந்து இருக்கணும்.
நீ கொஞ்ச நினைக்கையில் நான் குழந்தை ஆகணும்.
உன் விளையாட்டுக் கெல்லாம் ஒரு பொம்மை ஆகணும்.
நீ அழைக்கும் போதெல்லாம் நான் அவிழ்ந்து கிடக்கணும்
உன் படுக்கையில் நான் ஒரு தாதியாகணும்.
உன் காமச்சூட்டில் உன் மூளை உருகி
அறிவு மழுங்கும் போதெல்லாம் ஆவலாக
உனை அடுக்கும் அமைச்சராகணும்.
உன் முதுகு சொறிந்திட என் பவளக் கைகள் மண்வெட்டி ஆகணும்.
வெளிச்ச விழதுகள் உன் கால்கையைப்
பிடிக்கையில் என் காந்தள் விரல்கள் எந்திரம் ஆகணும்
நீ நோயில் படுத்தால் என் கமலக் கரங்கள் கழிப்பகற்ற ஆகணும்.
உன் மோகங்கள் தாங்க நான் சுமைதாங்கி ஆகணும்.
நீ நெஞ்சில் நினைப்பதை உடனே முடித்திடும்
அடிமையாக நான் அவதாரம் எடுக்கணும்.
நீ உதைத்திடும் போதும் கால்கைளை நக்கும் நாயாய்க் குழையணும்.
நீ மிதித்தாலும் விழித்தாலும் பொறுமையில் நான் பூமியாய் இருக்கணும்.
உனக்காக நான்... இன்னும் என்னவெல்லாமாக ஆகணும்..
நீ செத்தாலும் உன்னுடன் நானும் வரவேணும்.
ஆம் மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடத்தான் வேண்டும்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண் சஞ்சிகையின் 181வது இதழ் அட்டைப்படத்துக்கான கவிதை.**





முகிழ்ந்திட்ட புத்தாண்டு எம் முன்னே சிரிக்கின்றது
மூப்புகள் மறைந்தே மழை முகிலாகப் பொழிகின்றது
நிகழ்ந்திட நன்மைகள் வந்து நிரையாக நிற்கின்றது -தினம்
நீழகின்ற மகிழ்ச்சியில் இந்த நித்திலம் பூக்கின்றது...
நெகிழ்ச்சியில் மனமோ நிர்மலமாய்ப் பயணிக்கிறது
நிதர்சனத்து நிகழ்வுகளை நீடித்திட உழைக்கின்றது
திகழ்ந்திட்ட செய்திகளை திரைப்படம் பகர்கின்றது -நிதம்
திகட்டாமல் உள்ளங்களில் தீந்தமிழாய் இனிக்கிறது...
மகிழ்ச்சியின் பொங்கலிலே மனங்களோ நிறைகின்றது
மக்கள் திலகத்தின் மாண்பினைமனம் நினைக்கின்றது
புகழ்ச்சியின் உச்சத்தினை புவியின்று உரைக்கிறது -அவர்
புன்னகையின் நுகர்வே புத்துணர்வினைத் தருகின்றது...
அகழ்ந்திடும் எண்ணங்கள் ஆழத்தினையே ஆய்கின்றது
ஆயிரத்தில் ஒருவனை நூறு ஆண்டுகளாய் வியக்கிறது
இகழ்ச்சியே இல்லாததினால் இதயக்கனி சுவைக்கின்றது -அந்த
இன்பத்தின் வரவினையே எந்நாளும் எதிர்பார்க்கின்றது...

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு நீ..! - எட்டு..!!



கள்ளம் அறியாத பிள்ளை வடிவாக
கனவினில் நீ மிதந்தது போதும் - இனி
வெள்ளம் எதுவரினும் விரைந்து எதிர்கொண்டு
வெற்றிக் கனிபறித்து விஞ்சு...!
தெள்ளத்தெளிவாக தெரிந்த வித்தைகற்று
தேறி நிமிர்ந்து அரங்கேறு - என்றும்
அள்ளக் குறையாத அமுதசுரபியாக
அறிவில் நீ நிமிர்ந்து ஆடு..!
துள்ளும் மனதுடனே துயரம் தொடுவதற்குள்
தோல்வியெனத் துவழாதே தோழி - பிறர்
எள்ளி நகைப்பவருன் ஏற்றத்தை தடுப்பதற்குள்
எம்பி எழுந்து முன்னேறு..!
பள்ளத்தில் கிடந்துழலும் பாவியாயில்லாது
பாதகர் பிழையினை எரிக்கவாடி - நீ
மெள்ள எழுந்துநிதம் மேவும் அச்சம்தவிர்
மேதினி உனைமெச்ச மீழ..!
குள்ளமனத்துடனே கூட வருபவர்களின்
குறிப்பறிந்து நடந்திடடி நீயும் - மனம்
துள்ளக் கதைவடித்து துளிர்க்கும் காதலினை
துணிந்து உறுதியொடு தாண்டு..!
தெள்ளத் தெளிவாக தெரியும் எதிர்காலம்
திசையெங்கும் ஒளிபாய்ச்சும் - நாளை
உள்ளத்து உறுதியுடன் உயர்வை நீநோக்கி
ஓரடி எடுத்துவைத்திடு ஊன்றி...!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித ஆயுளை அறுக்கும் வாள்கள்..



முதலாவது வாள் கர்வம்:- மனிதர்களில் பலர், இந்த உலகில் நானே கெட்டிக்காரன். மற்றவரெல்லாம் முட்டாள்! என்று நினைக்கிறார்கள். ஒருவனுக்கு கர்வம் ஏற்பட்டால் கடவுள் சும்மா இருக்க மாட்டார். ஆகவே, கர்வம் இல்லாமல் இருக்க, தனது குற்றம் குறைகளைப் பார்க்க வேண்டும். பிறரிடம் நற்குணங்களையே பார்க்க வேண்டும்.

**இரண்டாவது வாள் அதிகம் பேசுவது:-**

தனக்குப் பேச விஷயங்கள் இல்லாதபோதும், வீண் பேச்சு பேசுபவன், வீண் வம்பை விலைக்கு வாங்குகிறான்.

**மூன்றாவது வாள் தியாக உணர்வு இன்மை:-**

அதீத ஆசையே மனிதனின் தியாக உணர்வைத் தடுக்கிறது. இதை உணர்ந்தால், தியாக உணர்வு தானே வரும்

**நான்காவது வாள் கோபம்:-**

கோபத்தை வெல்பவனே உண்மையான யோகி. கோபம் வந்து விட்டால், தர்மம் எது? அதர்மம் எது என்பது தெரியாமல் போகிறது. விவேகம் இழந்து பாவங்களைச் செய்ய நேரிடுகிறது.

**ஐந்தாவது வாள் சுயநலம்:-**

சுயநலமே எல்லா தீமைகளுக்கும் காரணம். சுயநலம் கொண்டவன் தனது காரியத்துக்காக பாவம் செய்யத் தயங்குவதில்லை.

**ஆறாவது வாள் துரோகம்:-**

இந்த உலகில் நல்ல நண்பர்கள் கிடைப்பதே அரிது. அப்படிப் பட்டவர்களுக்குத் துரோகம் செய்வது தவறு.

இந்த ஆறு விஷயங்களிலிருந்தும் ஒருவர் விலகி வாழ்ந்தால் நிச்சயமாக அவர் நூற்றாண்டை நிறைவு செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றும் இன்றும் பெண்......

பெண்களை பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி என சாமுத்திரிக்கா லட்சணத்தை வைத்து அன்று ஆன்றோர் பிரித்துப் பார்த்து பெண்களை தரம் போட்டு வைத்தார்கள் பெண்களுக்கு மட்டும்தான் சமுத்திரிக்கா லட்சணமும் தரம் கூறுமா? ஆணுக்கு இல்லையா? இன்றைய சமுதாயத்தில் பத்மினியும் சித்தினியும் குறைந்து மிகுதி இரண்டுமே பெரிதும் தலை விரித்தாடுது.

பெண் என்றால் பூவிலும் மென்மை தேனிலும் இனிமை என்பது சில கவிஞர்களின் கருத்தாக இருந்த போதும் யாரும் பெண்ணுக்கு முன் உரிமை கொடுக்கவே இல்லை பெண் எனப்படுபவள் வெறும் பேதை என்று நினைப்பவர்கள்தான் அன்று. இன்று அதிகமான பெண்கள் பேயாக மாறி விட்டதுதான் உண்மை சின்ன திரைகளும் புலம்பெயர் வாழ்வும் பெண்களை மாற்றுகிறதா வில்லிகளாக?

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்கிற நான்கு குணங்களும் பெண்ணுக்கு வேண்டும் என்று சொல்லி பெண்களை அடக்கி வளர்த்தார்கள் அன்று அதற்காகப் பெண்களை அடிமைகளாய் வாழச் சொல்லி எந்தப் பெற்றோரும் சொல்வதில்லை, சங்க காலத்தில் அரச குடும்பங்களில் பெண்களும் சகல வித்தைகளும்
பயின்றுதான் போருக்கு போகக் கூடிய வல்லமையோடுதான் வளர்க்கப்பட்டார்கள். பெண்ணுக்கு ஆடலும் பாடலும் மட்டும் சொந்தமில்லை தேவை வரும் போது பெண்ணும் புலியாக மாறிச் சீறிப் பாயத்தான் வேணும் என்பதுதான் நியதி.

கற்பு நிலையென்று சொல்லவந்தார் இருகட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்)
கற்பு என்பது பெண்ணுக்கும் ஆணுக்கும் சமமானது என்று பாரதியாரே பாடி வைத்தார் அன்று. ஆனால் சங்க காலங்களில் ஆண்கள் பலதாரம் மணமுடித்த போதும் பெண்கள் கற்பு நெறியோடு வாழ்ந்ததாக சரிதிரங்கள் கூறுகின்றன, ஆனால் இன்று புலம் பெயர்ந்த தமிழரிடையே அந்தக் கற்போ மானமோ காணகிடைத்தலே அரிது!

ஒரு தமிழ் பெண்பிள்ளை தன்னும் இங்கு ஒருவனை காதலித்து ஒருவனோடேயே வாழ்ந்ததாக காணமுடியவில்லையே! ஒரு தமிழ் பெண் பிள்ளை மூன்றாவது தடவையாக மணமுடிக்க போகின்ற கால கட்டதில் இன்றைய இளைய சமுதாயம் முன் நிற்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பிள்ளைகள் மட்டும் காரணம் இல்லை பெற்றவர்களும்தான் இதற்கு துணை போகிறார்கள் கற்பா மானமா? அது காற்றிலே பறக்குதையா இன்று! பெண்கள் கன்னி பருவத்தில் அழகை சிந்தினாலும் உரிய வயதில் அறிவோடு வளர்வதே அவசியம்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

ஆணுக்கு பெண் நிகராக பட்டங்கள் பெறவும் சட்டங்கள் கற்கவும் வேணும் என்றே பாரதி சொன்னார் ஒழிய, தறி கெட்டு அலையும் புதிய தமிழ் சமுதாயத்துக்காக கற்பிழந்து மானமிழந்து வாழ சொல்லவில்லை எந்த அறிஞரும்.

ஒரு பெண்ணாக நானிருந்தும் தற்போதைய பெண்களை பற்றியும் அவர்களது சீர் கேடு பற்றியும் சொல்ல எனக்கே நாக் கூசுகிறது! இதிலே ஆண்களை மட்டும் சிறப்பாக சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம் இளைய தலைமுறை ஒரு ஒழுக்கமற்ற பாதையில் போகிறது அதிகமான சிறார்களின் சீர் கேடான வாழ்கையை வாழ்வது உங்கள் கண்களிலும் தெரிய கூடும் இதற்க்கு எல்லாம் காரணம் யார்?

புலம் பெயர் வாழ்வும் இடமாற்றலும் கலாச்சாரமும் காரணம் இல்லை தனி ஒருவரின் ஒழுகத்துக்கு பெற்றவர்களின் வளர்ப்பு முறையும் அவசியமாகிறது. பெண்ணின் பெருமைகளைப் பேச எமக்கு இனி வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்பது ஒரு கேள்விக் குறிதான்??ஒரு பெண்ணுக்கு கல்வியும் பட்டமும் பதவியும் எவ்வளவு முக்கியமோ அது போலே ஒழுக்கமும் அவசியமே!

கவி மீனா - ஜேர்மனி.

---

கல்வி!...

அறியாமையை அகற்றி
மனங்களைச் செதுக்கி
மனிதனை மனிதனாக்குவது
அழிவற்ற கல்விச் செல்வம்!...

ஆசிரியர்!...

உண்மையை ஊட்டி
பொய்மையை அகற்றி
நன்மையே செய் என
வழி காட்டுபவர் ஆசிரியர்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 வயதில் திருமணம்... 13 வயதில் கர்ப்பம்... உலக குழந்தைகளின் அவலம்..!!

உலகளவில் குழந்தைகள் திருமணம் நடக்கும் நாடுகளில் நைஜீரியா, சாட், மாலி, சோமாலியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் தான் முன்னணியில் உள்ளன என அமெரிக்காவை சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

உலகில் ஏதேனும் ஒரு இடத்தில் ஒவ்வொரு நாளும் 15 வயதுக்குட்பட்ட குழந்தை திருமணங்கள் நடக்கின்றன. இதன் எண்ணிக்கை 12,000 ஆகும் என தெரியவந்துள்ளது.

மேலும், 2017 ஆம் ஆண்டில் 15 மில்லியன் பள்ளிக்குழந்தைகள் திருமண செய்துகொள்ளும் நிலையில் உள்ளனர் என இந்த நிறுவனம் முன்கூட்டியே அறிவித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தை திருமணங்கள் நடைபெறுவதற்கு முதல் காரணமாக முன்வைக்கப்படுவது, மேலே கூறப்பட்டுள்ள நாடுகளில் நடைபெறும் போர் மற்றும் வறுமை ஆகும்.

பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளை பராமரிக்கப்பட முடியாத காரணத்தால் இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்றனர்.

இதற்கு அடுத்தபடியாக, இளம் வயது குழந்தைகளை கடத்தி செல்லும் குழந்தைகள் அவர்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்துகின்றனர்.

மேலும் குழந்தைகளின் பெற்றோர்களை தீவிரவாதிகள் கொன்றுவிடுவதால் அக்குழந்தைகள் தீவிரவாதிகளையே திருமணம் செய்துகொள்ளும் நிலைக்கு ஆளாகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் 6 வயது சிறுமி ஒருவர் தனது 40 வயது இருக்கும் நபரை கடன் பிரச்சனைகளுக்காக திருமணம் செய்துகொண்டார். மேலும் ஏமன் நாட்டை சேர்ந்த 8 வயது சிறுமி தனக்கு திருமணம் நடைபெற்ற அன்று ஏற்பட்ட உதிரப்போக்கு காரணமாக உயிரிழந்துள்ளார்.

Syrian Sahar என்ற 13 வயது சிறுமி தனக்கு திருமணம் நடைபெற்ற அதே ஆண்டிலேயே கர்ப்பம் தரித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது, சிறுவயதிலேயே திருமணம் செய்துகொள்வதால் அவர்களின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது.

எனது திருமண வாழ்க்கை ஆரம்பத்தில் நரகம் போன்று இருந்தது. ஆனால் காலம் செல்ல அந்த வாழ்க்கைக்கு என்னை தயார்படுத்திக்கொண்டேன்.

என்னைபோன்று யாரும் இளம் வயதில் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்பதையே நான் விரும்புகிறேன். குறைந்தது 20 வயதில் தான் ஒரு பெண் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!..

ப.பசுபதிராசா - ஜேர்மனி

பங்குனி மாதம் எட்டாம் திகதி உலகப்பெண்ணின் ஒடுக்குமுறைக்கெதிரான எழுச்சியின் ஞாபகமூட்டல் புவி எங்கும் நினைவு கொள்ளப்படுகின்றது. பெண்ணின எழுச்சிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். அறிவியல்த் தொடர்புகளும் விஞ்ஞான வினை நுட்பங்களும் உச்சகட்டத்தில் உலவும் இந்நேரம் உலகப் பெண் இனத்தின்மீது ஒடுக்குமுறை அழுத்தங்களும் பாலியல் பலாத்காரங்களும் என்றுமில்லாத அளவிற்கு விஞ்சி நிற்பது பெரும் அச்சத்தைத் தருகிறது.

உலகில் இருக்கின்ற பல விதிகளில் ஒன்று ஆண்-பெண் எதிரெதிர் பாலினங்கள் இதன் சிறப்பு என்பது எதிர்ப்பாலினங்கள் என்பன ஒன்றை ஒன்று கவரும் இது இயற்கையின் பெருமையான அங்கீகாரம். ஆனால் மனித இனத்தில் மட்டும் ஆண்-பெண் எதிர்பாலினங்கள் தமக்குள் இன்னுமோர் சகஜ நிலையை அடையவில்லை என்பதுதான் வருத்தமான செய்தி.

உலகில் சிறந்த மனித உரிமை மகத்துவங்களும் சுதந்திர இறைமையும் நிலவும் நாடான அமெரிக்காவில் ஒரு பெண் இனமும் அந்நாட்டின் உயர்ந்த ஆளுமையைப் பெறமுடியாது மறைந்து நின்று செயற்படும் ஆணாதிக்க வெற்றியின் வெறியை வெட்கத்தோடு பார்க்கும் ஒருபுறம் இந்திய மாநிலமான மணிப்பூரில் நிலைகொண்டுள்ள இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை வைத்து இருபது ஆண்டுகளாய் உண்ணா நோன்பு இருந்து போராடிவரும் சர்மிளா என்ற பெண்ணின் அசராத மனஉறுதியையும் விரைவில் மணிப்பூருக்கான விடுதலையும் சர்மிளாவின் பெயரை உச்சரிக்கப் போகின்றது. தடைகளை உடைத்து விடுதலையை அடைய ஓங்கட்டும் பெண்ணின எழுச்சி.

இப்பெண்ணின் எழுச்சி மாற்றமின்றி உலகெங்கும் மனிதகுல மீட்சிக்காய் முகம்தெரியாமல் அகம் தெரியும்படி ஜெகம் முழுவதும் சோகம் வாட்டுகின்ற மாதர்களுக்கு வாழ்த்துக்கள். ஆனால் இக்கட்டுரையை எழுதப் பேனாவைத் திறந்தபொழுது இந்திய தமிழ்நாட்டில் ஏழுவயதுகூட நிரம்பாத பச்சைப்பாலகி கசினியை மென்பொருள் பொறியியலாளன் என்ற தகமையுடைய ஒரு பாதகக் காமுகன் இரையாக்கிப் பின் எரியூட்டிப் புரையோடிப்போன ஆணாதிக்க சதை வெறித்திமிரை உசத்திக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சம நேரத்தில் பெண்ணினச் சுதந்திரம் உச்சத்தில் கொண்ட ஜேர்மனியில் ஒரு பொதுப்பணியில் சிறந்த ஒரு செந்தேன்நிலவு சேற்றில் அகப்பட்டுச் சிதைந்தது. இலங்கையில் அம்பாந்தோட்டையில் இன்னொரு பாலகியை பாழாக்க எழுந்த ஆபத்தை ஊரார் கண்டுபிடித்து தடுத்துவிட்டனர். இப்படி ஒரு கட்டுரை எழுதி முடிப்பதற்குள் கணனி கொண்டுவந்து சேர்த்த கண்ணீர் காவியங்கள் இன்னுமோர் சோகம் இதயக்கதவைத் தட்டுகின்றது. அதுதான் கணனிக்குள் வராதது எத்தனையோ!...

பெண்தோன்றிய காலம் தொட்டு இன்னுமே மாறாத இம்சையைக் கணித்துத்தான் அவ்வை மூதாட்டி "பேடை நீங்கிப் பிறத்தல் அரிது" என்று அடித்துச் சொன்னாளோ?..பெண் இன அடக்குமுறையை பொதுவாகக் கல்வி என்பது சற்றுக் குறைந்து வந்தாலும் சாதிய ஆதிக்கம் சூழ்ந்த பெண்களில் அழிவும் இழிவும் மென்மேலும் எகிறிக்கொண்டேதான் உள்ளது என்பதற்குத் தமிழ்நாட்டில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைச்சாதிப்பெண் நந்தினி சாதிய ஆதிக்கமும் இந்துமத வெறியும் கை இணைந்த காமக் கயவர்களால் கூட்டுப்பாலியல் செய்யப்பபட்டு அவளும் அவள் குழந்தையும் காவு வாங்கப்பட்டு கிணற்றில் வீசிய கொடுமை புதுடில்லி மாணவி நிர்பயாவுக்கு நேர்ந்த கொடுமையைவிடக் கொடியது.

இலங்கையில் எதிரியானவன் ஈழத்திமிழ்ப் பெண்களை போராட்டப் புழதிக்குள் தின்று முடித்த காலம் ஏதோ போய் முடிந்தது என்று நிதைத்தால் தன் இனமே தன்னைத் தின்னும் பாம்மைப்போல இன்று தமிழ்ப் பெண்கள் தமிழ்க்குலக் காமுகர்களால் தினமும் சீரழிக்கப்படுவது விதியே. தமிழ்ப் பெண்களை என்ன நினைத்தாய் என்று எண்ணத்தோன்றுகின்றது. புங்குடுதீவு மாணவிக்கு நடந்த கூட்டுப்பாலியல் கொடுமைக்கு இன்னும் நீதி இல்லை. வவுனியா வைஸ்ணவிக்கு இன்னும் நியாயம் இல்லை. இன்னும் காணாமல் போன சகோதரிகளுக்கு நியாயம் இல்லை. இதுதான் இனிமேல் பெண்ணைச் சூழும் அபாயம்.

சமூக வெளியில் இன்று பெண்களுக்கு நடக்கும் அவலங்களுக்குப் பெரும்பாலும் ஆண்கள் வகுத்த சட்டங்கள்தான் அதிகம் துணைபோகின்றன. பெண்கள் எப்படிப் பாதிக்கப்பட்டாலும் பாதிப்புக்குள்ளானவனுக்குத் தரப்படும் ஜனநாயக உரிமை என்ற பாராபட்சம் பெண்ணுக்கு இளைக்கப்பட்ட அநீதியை இளைப்பாறச் செய்கின்றது. கிட்டத்தட்டப் பத்துப் பேர்கள் சேர்ந்து செய்த புங்குடுதீவு பள்ளி மாணவிக்கு மூன்று வருடங்களுக்கு மேலாக ஆதாரம் தேடும் அத்தியாயம் தொடர்கின்ற பொழது இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கணக்கான பாலியல் வழக்குகள் மேசைக்கு வந்துவிடுமோ?.. இல்லை வராமல் போய்விடுமோ என்ற அச்சம் இன்று மனச்சாட்சியுள்ள ஆண்களையே ஆட்டிப்படைக்கின்றது. இப்படிச் சட்டம் தன் கடமையைச் செய்ய மறுக்கின்றபோது ஆண்கள் தங்கள் கை வரிசைகளைத் தாராளமாகத் தொடர்ந்து செய்வர்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி, இந்த உண்மைச் சமூகத்தில் வளர்ந்திருப்பதாலேயே தமிழ்நாட்டில் சிறுமி காசினியைச் சீரழித்த அடுத்த வாரமே ரித்தியா என்னும் மூன்று வயதுச் சிறுமி சீரழிக்கப்பட்டு குப்பை மேட்டில் கட்டிப்போட்ட ஆண் ஆதிக்க வன்மம் மலையேறி நிற்கின்றது. ஆண்கள் தங்கள் குடும்ப வாழ்வில் ஏதாவது பெண்ணின் பந்தம் சொந்தம் என்றுதானே வாழ்ந்திருக்க வேண்டும், ஆனால் காட்டுக்குள்ளே வாழ்ந்துவந்த காட்டுமிராண்டிகளிடம் இல்லாத கொடூர மனம் கொண்டவர்களாக நவீன நாகரீகப் பேர்வழிகளே சம்பவங்களின் நாயகர்களாக வெளிக்கிளம்புகின்ற காட்சி கலக்கம் நிறைந்தது.

காதல் என்பது வெறும் உடற்கவர்ச்சியை வைத்தே கணிக்கப்படுவதாக அண்மைக்காலக் காதல் கொடுமைகள் கவனிக்கப்படுகின்றன் காதல் என்பது இதயத்தின் அன்புத் தேடல் என்பதை மறுதலித்து காதலியாகிய நீ எனக்குத்தான் கிடைக்கவேண்டும். இல்லையேல் கழுத்து வெட்டிச் சாகடிப்பதும் எரிதிரவம் கொண்டு உடலை அழிப்பதும் என்றும் கண்மூடித்தனமான கொடூரங்கள். சர்வாதிகாரமான போக்குகள் சமூகத்தையும் சட்டத்தையும் மனித அறிவியல் வளர்ச்சியையும் கேலிக்கூத்தாகிச் சந்தி சிரிக்கின்றது. இன்று படித்த பெண்கள் சிலர் தாங்கள் படித்துவிட்டோம் என்ற போர்வையில் பல தொலைக்காட்சிகளில் தோன்றி பெண்ணுரிமைகளைப்பற்றி எடுத்து இயம்பும் தோரணையும் நடை உடை பாவனையும் சட்டமும் காவலும் பெரிதாக இருக்கும் நகரங்களில் சிறிது சாத்தியமாகலாம். ஆனால் எதுவும் அறிந்திராத பெரும்பாலான அப்பாவிப் பெண்கள் இந்தப் பெண்ணினத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் பெண்கள் மேல் உள்ள ஆத்திரத்தை வஞ்சகத்தைத் தீர்க்கும் அல்லது பழிவாங்கும் தொடர்கதைகள் நடைபெறுவதை அவர்கள் அறியமாட்டார்கள். உணர்ச்சிவசப்பட்டு குமுறும் ஒரு சில பெண்களின் கூச்சல் எல்லாம் பெண்களுக்கு விடிவைத்தராது.

இன்று இலங்கைத் தமிழ்ப் பெண்கள்மீது தொடரும் பாலியல் தொல்லைகள் எதிரிகளால் ஏற்பட்ட ஒருகாலம் போய் தமிழ்க்காமக்கொடுமை வெந்த புண்ணில் வேல் பாச்சுவதுபோல் பெண்கள் மீதான கொடுமைக்கு எக்காலமும் விடிவு கிடைத்தபாடில்லை. தமிழ்சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலோச்சிக்கிடந்த அடக்குமுறைகளையும் அடிமைத்தனங்களையும் போக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆயுதத்திடம் நம்பிக்கை வைத்த பெண்கள் அழிந்துகொண்டே இன்னும் எதிரிகளிடம் பாலியல் அடிமைகளாகத் தொடர்வதை விடுதலை விரும்பிகள்கூட ரசிக்கின்றனர். ஆகப்பெண்குலம் ஆண்களுக்கு எதிரிதான்.

இனிப்பெண்ணினம் தான் கடந்துவந்த பிரச்சனைகளுக்குத் தானே வழிகாணும் இலட்சியம் படைத்தவர்களாக, ஆண் சார்ந்து நிற்கும் எந்தக்குழுவிடமும் தன்னை ஒப்படைக்காது தானே தன் வேட்கையை நடத்த முன்வர வேண்டும் உடைகளைக் குறைப்பதும் உடல் இறுக்கி உடை அணிவதும் நுனி நாக்கு ஆங்கிலமும் ஆண்களை வெல்லும் சாதுரியமாகத் தெரியவில்லை. உடலைத்திறந்து உடலை மறைக்க ஓசோ சொன்ன நிர்வாண நிவாரணம் இங்கு செல்லாது. முற்றும் திறந்து வைத்தால் முனிவனுக்கும் ஆசை வரும் என்ற பண்பு வாழும் நம் மனதில் நான் எனது விருப்பப்படி உடையணிவேன் என்பது உரிமைக்குச்சரி உறவுக்கு என்றும் உபத்திரம். உணர்ந்து வாழ்வது பெண்ணினப் பெருமிதம்!....

---

## சுமைகள் சுமையல்ல!....

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த அம்மாவுக்கு வலியில்லை
பாடசாலைக்குக் கைபிடித்துச் சென்ற அப்பாவிற்குக் களைப்பில்லை
பாடசாலையிலே வாங்கிய குட்டுக்கு நோவில்லை
கல்லூரி வாசலிலே கண் அடித்ததிலே இமைகள் தேயவில்லை
காதலுக்குக் கடிதம் எழுதியதிலே கைகள் ஓயவில்லை
பனி சுமந்த மரம் செடி கொடிகளுக்கு குளிரில்லை
கனி தாங்கிய கிளைகளுக்கு பாரமும் தெரிவில்லை
நிலத்தில் விழுந்ததால் பனித்துளிக்குக் காயமில்லை
கொய்யும் மலர்களெல்லாம் இறைவன் பாதம் செல்வதும் இல்லை
கொய்யாத மலர்கள் மாலையாய் ஆவதுமில்லை
நெய்யாத நூல் சேலை உடுப்புக்களாவதும் இல்லை
நெய்த சேலையாக இருந்தும் பெண்கள் அணிவதும் இல்லை
தோல்வி நிரந்தரமும் இல்லை வெற்றி என்றும் தாரமுமில்லை
தோல்விகள் தோல்வியல்ல ஏற்றுக் கொள்வோம்
வெற்றியைத் தக்கவைக்க பழகிக் கொள்வோம்
மனித வாழ்க்கை எம் கையில் சுமைகள் யாவும் சுமையல்ல!...

திருமதிஜெயா நடேசன்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 7 | 3 | 8 | 6 | 1 | 4 |
| 7 | 3 | 1 | 9 | 6 | 4 | 2 | 8 | 5 |
| 8 | 6 | 4 | 2 | 5 | 1 | 7 | 3 | 9 |
| 6 | 1 | 3 | 4 | 9 | 5 | 8 | 2 | 7 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 2 | 5 | 4 | 6 |
| 2 | 4 | 5 | 6 | 8 | 7 | 3 | 9 | 1 |
| 3 | 8 | 6 | 1 | 7 | 9 | 4 | 5 | 2 |
| 1 | 2 | 7 | 5 | 4 | 3 | 9 | 6 | 8 |
| 4 | 5 | 9 | 8 | 2 | 6 | 1 | 7 | 3 |

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| பெ | ண் | க | ள் |
| ன் | கு | தி | க |
| சி | று | த் | தை |
| ல் | ட | க | வி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர | தி | வ | ம் |
| ன் | ண் | கா | வ | ம் | ட | த |
| ளா | ணீ | க் | ஞ | பு | ப | ணி |
| ர் | ர் | கு | ள | டி | ட் | க |
| லி | லி | ட | வ | ட் | ட | ம் |
| ல் | தி | க் | ரு | ப | ம் | செ |
| பு | ரு | த் | தி | ங் | க | ள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக பெண்கள் நாள




(International Womens Day) ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் திகதியன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் பல நாடுகளில் பொது விடுமுறை நாளாகும்.

வரலாறு...

1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரநிதிநித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர்.ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இடியென முழங்கி, இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் எனவும் அறிவித்தான்.ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம். அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க அரச மாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது. அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிப்பேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப் படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாது போகவும், அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான். இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்டநாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.பிரான்சில்,புருஸ்யனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க், பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் 8ம் நாளாகும். அந்த மார்ச் 8 ஆம் நாள் தான் அனைத்துலக பெண்கள் நாள் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

**அமெரிக்க பெண்கள் புரட்சி...**

அமெரிக்காவின் தொழிற்புரட்சி நகர் நியூயோர்க், இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணிநேரம் வேலை செய்து மிகக் குறைவான ஊதியத்தைப் பெற்றனர். அந்த ஊதியத்தைப் பெறுவதற்குக் கூட நிர்வாகத்தில் உள்ளவர்களின் உடற்பசிக்கு இணங்கினால் தான் கிடைக்கும் என்ற நிலை இருந்தது. 1857 இல் நியூயோர்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர். தொடர்ந்து போராட்டங்கள், பெண்கள் அமைப்புகள் தோன்றின.1908 இல் வாக்குரிமை கேட்டுக் கொதித்து எழுந்தனர். ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டே போராட்டத்தின் தாக்கம் கண்டு குலைந்து போனார். போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் கிளர்ந்தெழுந்தது. அதன் விளைவு 1910 இல் ஹேகனில் அனைத்துலக பெண்கள் நாள் மாநாடு கிளாரா ஜெட்கின் தலைமையில் கூடியது. அதன் தொடர்பாக சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட மகளிர் பிரதிநிதிகளின் முதல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கூட்டத்தில் தான், அரசன் லூயிஸ் பிளாங்க் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல் அளித்த நாளான மார்ச் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் நாளை சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர்! பெப்ரவரி 28, 1909 இல் அமெரிக்க சோஷலிஸ்ட கட்சியின் ஒப்புதலுடன் முதன் முதலாக அந்த நாட்டில் பெண்கள் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 1913 வரை பெப்ரவரி மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பெண்கள் நாளைக் கடைப்பிடித்து வந்தனர். மார்ச் 25 1911 இல் நியூயோர்க்கில் ஒரு கட்டிடத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் சுமார் 140 க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். இந்நிகழ்வே அமெரிக்காவில் தொழிலாளர் சட்டத்தைக் கொண்டுவர மிக முக்கிய நிகழ்வானது. தொடர்ந்து அனைத்துலக பெண்கள் நாள் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படலாயிற்று.

**ரஷ்யாவில் பெண்கள் எழுச்சி**

1913-1914-களில் முதல் உலகப் போரின் போது ரஷ்யப் பெண்கள் அமைப்பினர் போருக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக பெண்கள் நாள் பேரணிகளை நடத்தினார்கள். இதே ஆண்டில் மார்ச் 8 ஆம் திகதியில் பெண்கள் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

**ஐநா பேரறிவிப்பு...**

பின்வந்த நாட்களில் ஐ.நா. பெண்கள் அமைப்பு சார்பில் அனைத்துலக பெண்கள் நாள் கடைப்பிடிப்பது என முடிவெடுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

---------------

## பெண்!...

வாழ் நாள் முழுவதும்
அடிமையாய் அடக்கப்பட்டு
ஆற்றல்கள் முடக்கப்பட்டு
உணர்வுகள் பறிக்கப்பட்டு
உலா வருபவள்தான் பெண்!...

குமரியாய் தாரமாய்
தாயாய் மாமியாய்
பேத்தியாய் பூட்டியாய்
காலம் முழுவதும்
சம்பளமில்லாமல்
மாடாய் உழைத்து
ஓடாய் தேய்ந்து
நோயுடன் வாழ்பவள்தான்
பெண் என்னும்
படைப்பாளி!...

சிவா – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பெண்களின் நிலை....

இன்று உலகில் பெண்கள் பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் பெருமைமிக்கவர்களாக உருவாகும் பொழுது அவ்வீட்டிலுள்ள அனைவரும் இயல்பாகவே பெருமையோடு உலா வர வழி ஏற்படும். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்" என பெண்களின் குறிக்கோளை கூறியது மட்டுமல்லாமல் "எட்டும் அறிவினில் ஆணிற்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்ற பாடலில் பெண்சமுதாயம் பெருமை பெற்றது. யுகம் யுகமாக முகம் பார்க்க மட்டுமே கண்ணாடி பார்த்த பெண்கள் கணிப்பொறித்திரையோடு உரையாடும் காலமிது. இன்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் சரி அதில் முன்னேறியுள்ள பெண்களின் பின்னணியில் இருப்பது கல்வி. இந்திராகாந்தி, அன்னைதெரசா, அன்னைபூபதி போன்றவர்களை உருவாக்கியது ஒரு பொறுப்பான தாய்தான் என்பதை உணரவேண்டும்

பெண் உலகின் விழிவெள்ளியாகத் திகழ்கிறாள்.மாதர்தம் மை அடக்கி வைக்கும் மடைமையை ஒழித்துவிடுபவளாக பெண் விளங்குகிறாள். முக்கியமான விடயம் ஒன்றை சொல்லியே ஆகவேண்டும். பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலைதான் என்ன? சொல்லவே நாக்கூசுகிறது. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்த காலமது என்பதையும் மறுப்பதற்கில்லை கிராமங்கள் ஆனாலும் சரி நகரமானாலும் சரி பாமரபெண்ணானாலும் சரி படித்தபெண்ணாலும் சரி இன்றைக்கும் பெண்களின் நிலை சில வகையில் மிகவும் இழிவாக மனவேதனைப்படும் விதமாக உள்ளது. இப்படிப்பட்ட பெண்களுக்கு எதிரான செயல்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

1789ஆம் ஆண்டு யூன் 14ந்திகதி சுதந்திரம், சமத்துவம், பிரநிதித்துவம் போன்ற கோரிக்கைகளை ஏற்று பிரஞ்சுப்புரட்சி நடாத்தப்பட்டது. 1848 பிரான்சில் புருசியசில் இரண்டாவது குடியரசை நிறுவிய 'லூயி பிளாங்' பெண்கள் அரசவை ஆலோசனைக்குழுக்களில் இடம்பெறவும் வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்த நாள் 1848 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 8ம்நாள். இதுவே அனைத்துலக பெண்கள்தினம் என அறிவிக்கப்பட்டு இன்று 167 வருடங்கள் ஆகியும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் ஓய்ந்தபாடில்லை. ஆம் இந்த 20ம்நூற்றாண்டில் தமிழர் தாயகத்தில் நடந்தேறிய காட்டுமிராண்டித் தனங்களை தட்டிக்கேட்க முன்வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சிரியா போலன்ட் ஈராக் போன்ற நாடுகளில் வாழ்பவர்களை அந்நாட்டு குழப்பங்களுக்காக அடைக்கலம் கொடுக்க ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ள வேளை சிங்களராணுவத்தால் இலங்கையில் உள்ள தமிழ்ப்பெண்கள் அனுபவித்த பாலியல் வல்லுறவு துன்புறுத்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகளை இன்னும் எதிர்கொள்ளும் இந்நிலையில் ஏன் அடைக்கலம் கொடுக்க மறுக்கின்றதோ தெரியவில்லை. ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் கைக்கூலிகள் இதுதான் உண்மை. எமது தமிழ்ச்சமுதாயம் பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற கோட்பாடுகளுக்குள் இருப்பின் அவள்தான் பெண். இல்லையெனில் ஓடிப்போனால் ஓடுகாலி என்பதுவும் யதார்த்தமே. பெண் ஆணோடு சேர்ந்து பழகினால் அவளுக்கு வேசி எனவும் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் இயந்திரம் கருப்பை பழுது என்றால் அவள் மலடி என எத்தனையோ பட்டங்கள். இவ்வகையான இன்னல்கள் பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுவதற்கும் தரக்குறைவாக பேசுவதற்கும் பெண்கள் தடம்புரள்வதற்கும் ஆண்கள் எவ்விதத்திலும் காரணம் இல்லையா?

இன்றைய பெண் சமுதாயத்தை பீடித்துள்ள நோய்களுள் பலவற்றை குறிப்பிடலாம். வரதட்சனை, பால்யவிவாகம், பெண்சிசுக்கொலை, உடன்கட்டைஏறுதல், போன்ற விவகாரங்களை குறிப்பிடலாம். பெண் சிசுக் கொலை நடந்தேறுவதற்கு முக்கியகாரணமே வரதட்சனைக்கொடுமையே எனலாம். அப்படி விவாகம் செய்தாலும் அவர்கள் கொத்தடிமையே. ஏன் இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழ்ந்தாலும் சில இல்லங்களில் சில பெண்களின் நிலை இதுதான். இதனை கவிஞர் வைரமுத்து அவர்கள் வேதனையோடு குறிப்பிடுவதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். "பாவம் பெண்கள் இந்த இல்லறக்கிரிக்கெட்டில் கட்டிலறைக்கும் சமயலறைக்கும் ரன்கள் எடுத்தே ரணமாய்போனார்கள்". இது போன்ற நிலையில் தான் பெரும்பாலான பெண்களின் வாழ்கை உள்ளது. ஆம் "பெண் போடும் இரட்டைவேசம்" என்றே சொல்வேன். உடன்கட்டை ஏறுதல் போன்ற விவகாரங்கள் இன்றைக்கு குறைந்ததிற்கு கி.பி 1774ல் வங்காளத்தில் பிறந்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்த "ராயாராம்மோகன் ராயின்" தலை சிறந்த சமுக சேவையை குறிப்பிடலாம். ஆதாவது சதி எனும் உடன்கட்டை ஏறுவதை எதிர்த்து போராடியதும் பலதாரமணம் ஒழிக்கப்பட்டு கைம்பெண் மறுமணம் கலப்புத்திருமணம் போன்றவற்றை ஆதரித்தமையையும் கூறலாம்.

"திருமணம் சொர்க்கத்தில் அல்ல ரொக்கத்தில் தான் நிட்சயிக்கப்படுகிறது." இந்த மனநிலை மாற வேண்டும். ஆண்கள் பெண்களுக்கு சீதனம் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை உருவாக வேண்டும். அத்துடன் பெண்களை ஆண்கள் தம் துணையாக பார்க்க வேண்டும் எனக் கூறுகிறார் பாரதி எப்படி எனில் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்" என்று கூறினார். இந்த வழியில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வரும் பொழுது வரதட்சனைக் கொடுமை முடிவுக்கு வரும்.

ஆண் என்பவன் தாயின் கருவறையில் இருக்கும்போது தாய்படும் இன்னலை கண்டுவிடமுடியாது. பிறந்து பெரியவனாகி அவனும் திருமண பந்தத்தில் புகுந்து தாய்மை அடைந்த அவனது மனைவியை பார்த்தும் திருந்தாத ஆண்வர்க்கங்கள் எப்பவும் திருத்திவிடமுடியாது. ஒரு பெண்ணானவள் குழந்தை பெற்றெடுப்பதில் 1ம்மாதம் உதிரம்மிஞ்சி 2ம்மாதம் இதுவென்றுஅறிந்து 3ம்மாதம்முழுவதும் தெரிந்து 4ம்மாதம் வாந்திஎடுத்து 5ம்மாதம் மாங்காய்தின்று 6ம்மாதம் இழப்பதுநோக 7ம்மாதம் இடுப்பது நோக 8ம்மாதம் நடைதளர்ந்து 9ம்மாதம் சிலர் முன்அழுது 10ம்மாதம் பலர் முன் அழுது பெற்றெடுக்கும் அவளுக்கு எத்தனைதான் இன்னல்கள்.

சிங்கள வெறிகாடையர்களால் தமிழ்ப்பெண்கள் அனுபவித்த கொடுமைகளை சனல்4 காட்சிகளை பார்த்து கண்ணீர் விட்டழுததும் மறக்கவில்லை.

தாய்க்கும் தாரத்திற்கும் வித்தியாசம் கண்டு கொள்ளாத ஆண்வர்க்கம் பெண்களை காமவெறி கொண்டு பார்க்கும் இவர்கள் எல்லாம் அன்னையர் தினத்தை எப்படி மதிப்பர். "பாதகம் செய்பவரைக்கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா மோதிமிதித்துவிடு பாப்பா" அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்று பாரதி பிஞ்சு பிள்ளைகளின் மனதில் விதைத்தார்

ஏனெனில் இந்தப் பெரிசுகள் சொன்னால் கேட்காதுகள் என்று நினைக்கதோன்றுகிறது. பெண்ணை மனதளவில் பலவீனப்படுத்தி தாழ்வுமனப்பாங்கை உண்டாக்காமல் அவளை பாதுகாப்பதே மேலானது. பெண்ணை தெய்வமாக, தேவதையாக, தலைவியாக, வர்ணிக்கும் இலக்கியங்கள் உயர்வான மதிப்பை போற்றும் அதே நேரம் பெண்ணின் இயல்பான மன ஓட்டங்களை உணர்வுகளை மதித்து பழக வேண்டியது ஒவ்வொரு ஆணின் கடமையாகும். அப்போதுதான் பெண்ணுரிமை என்பது செயலால் சரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் பாரதி கண்ட புதுமைப்பெண் மலர்ந்து விட்டார்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் பெண்கள் மனம் வருந்தி கண்ணீர் சிந்துகிற எந்த மண்ணும் செழிக்காது. எத்தனை வளம் பலம் இருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருபெண்ணின் வெற்றிக்குத் தோள் கொடுத்து துணை நிற்போம். அப்போது தான் இந்தத் தேசம் உலகில் முதல் இடத்தை எட்டும்!...

---

# பெண்கள்.......

திருமதி கெங்கா ஸ்ரான்லி - ஜேர்மனி.

கடவுள் படைக்கும் போதுபெண்ணை ஆணுடன்சேர்த்துபடைத்தான். ஏனெனில் பெண் இல்லாவிடில் ஆண்மட்டும் தனிய இருந்து எதையும் செய்துவிடமுடியாது என்றோ. பெண்ணாகப் பிறப்பதற்கு மாபெரும் தவம் செய்திடல் என்பதற்கமைய, பெண்ணினம் படைக்கப்படுகிறது. இந்தப் பெண்ணும் பிறந்து எவ்வளவு சந்தோஷங்கள் உண்டோ,அவ்வளவு துன்பங்களும் அனுபவிக்கின்றார்கள்.

அந்தகாலத்திலே பெண்ணைத் தெய்வமாக மதித்தார்கள்,அதனால்தான் கண்ணகிக்கு கோயில் கட்டினார்கள்,அந்தக் காலத்தில் பெண்ணை அடிமையாக வைத்திருந்தாலும், சிலசிலபெண்கள் தங்கள் சாதுரியத்தை காட்டத்தவறவில்லை. வெளிநாட்டவர் ஆட்சியில் தற்கொலைப்படையில் தன்னைத் தீக்கிரையாக்கி,வெற்றி கொண்டதமிழச்சியும் இருந்தாள் என்றால் விஞ்ஞானம் முன்னேறாத அந்தக்காலத்திலேயே வீரதீரம்மிக்க பெண்கள் இருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் அல்லவா?. இந்தக் காலம் நவீனமய உலகில் எதையும் செய்யலாம்,ஆனால் அந்தக்காலம் அவர்கள் செய்தது மாபெரும் வீரதீரச்செயல் என்றுதான் கூறவேண்டும்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது எமது பண்பாடு ஆனால் வெளிநாட்டவர் கார்ல்ஸ்மார்கின் மனைவி எவ்வளவு வசதிபடைத்தவளாகஇருந்தாலும் அதைவிட்டு, தனது கணவனுடன் சேர்ந்து வாழ்ந்து துன்பத்திற்கு மேல்துன்பம் அனுபவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தனது கணவரைப் பிரிந்து நன்றாக வாழ்ந்திருக்கமுடியும், அவர்மீதுவைத்த அன்பால், அத்தனையும்தாங்கிக் கொண்டாள். இவளும் பெண்தான், ஒருவனுக்கு ஒருத்தி என்பது இங்கும் பொருந்துகிறது. ஏன் சர்வதிகாரி ஹிட்லரையும் ஒருபெண் அன்பால் ஆதிக்கம் செய்தாள். நெப்போலியன்கூட தனது தாய் மீது வற்றாத பாசம் கொண்டிருந்தான், இதுவரலாற்றுகூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக எப்படியான கொடூர மனத்தவரையும் அன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டவள் பெண். இந்தப்பெண் இல்லையெனில் இந்த உலகில் எதுவுமில்லை. எதுவும் அழகும் இல்லை. இந்தியாவில் பெண் சிசு பிறந்துவிட்டால் நஞ்சு கொடுத்து கொலை செய்வார்கள், இதுகொடுமையிலும் கொடுமை. அவர்களது அறியாத்தன்மை. ஆனால் இன்று ஆணுக்கு நிகர் பெண் என்ற நிலைமை வந்தாச்சு, உலகம்எங்கும்.அதனால் பெண்ணை அடிமையாக நடத்தவோ, பெண்ணினத்தை இழிவுபடுத்தவோ முடியாது.

இப்போது வளர்ந்துவரும் சமுதாயம் பெண்கள் எவ்வளவு சாதனைசெய்கிறார்கள், நாங்களும் ஊடகங்கள், பத்திரிகைகள்மூலம் தெரிந்து கொள்ளுகின்றோம். அதிலும் பெருமை ஈழத்துபெண் ஒருவர் டென்மார்க்கில் விமானஓட்டுநர் ஆகஇருப்பது. இன்னும் எத்தனை சாதனைகள். எவ்வளவுதான் பெண்ணினம் முன்னேற்றம் கண்டாலும் சில இடங்களில் ஆணாதிக்கம், பெண் அடிமை கொள்ளத்தான் செய்கிறது இது பெண்ணின் விதியா? சொல்லமுடியவில்லை. ஆனாலும் எதிர்த்துப் போராட்டங்கள் நடக்கத்தான் செய்கிறது, இருந்தும் என்ன துயர், துயர்தானே !

பெண்ணால் செய்ய முடியாது என்றசெயல் இப்போது இல்லை. புலம்பெயர்வில் இங்கே, பெண்கள்எவ்வளவு உயர்ந்துள்ளார்கள் என்பதுகண்கூடு. அவர்கள் முன்னேறிவிட்டார்கள். இனி என்ன பெண்கள் உலகமாகிவிடும் அவர்களுக்கும். ஒருகிரீடம் கிடைத்துவிட்டது..ஆகபெண்கள் இப்போ மேன்மைநிலை அடைந்துவிட்டார்கள். இன்னும் அவர்கள் சாதனைகள் புரியவேண்டிஉள்ளது. சோதனைகள் வந்தாலும், சோகமே என்றாலும் போதனைகள் செய்து புரியவைத்துச் சாதனையில் வெற்றியீட்டவேண்டும். மகளிர் தினத்திற்காய் மண்வாசனையுடன் மகிழ்வுபெறுக!

---------------------------

## வல்லரசு நாட்டில்!...

உலகில் நாளுக்கு நாள் பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவது மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. வல்லரசு நாடான அமெரிக்காவில் 91 சதவீத பெண்களும், 9 சதவீதமான ஆண்களும் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர் என அமெரிக்க பீரோ புள்ளியல் தகவலை வெளியிட்டுள்ளது. 6 பெண்களில் ஒருவர் மற்றும், 33 ஆண்களில் ஒருவர் என வாழ்நாள் முழவதும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். இதில் கல்லூரி மாணவிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமங்கை செரீனா வில்லியம்....



ஒரு நாள் வருமானம் 4 மில்லியன் (40 லட்சம் US டொலர்) பரிசுப்பணம் என்ன இது 40 லட்சம் டொலர் கணக்கு என்று யோசிக்காதீர்கள். ஆம் அக்காவும் தங்கையும் ஒரு நாள் சேர்த்த பரிசுப் பணமாகும். ஒரு நாளில் 40 லட்சம் அமெரிக்க டொலர்களை அள்ளிச் சென்றுள்ளனர். களவெடுக்கவில்லை, தட்டிப் பறிக்கவில்லை, கொள்ளையடிக்கவில்லை. தமது மன உறுதியாலும், உடல் வலிமையாலும், பயிற்சியாலும் முயற்சியாலுமே அக்காவும் தங்கையும் ஒன்று சேர்ந்து ரெனிஸ் விளையாட்டின்மூலம் ஒரே நாளில் 40 லட்சம் அமெரிக்க டொலர்களைப் பரிசாகப்பெற்றதால் ஒரே குடும்பத்தில் இந்தப் பெருந்தொகைப் பணம் சென்றிருப்பது வரலாற்றுச் சாதனையாகும்.

ஆம்...கடந்த 16.1.2017 தொடக்கம் 29.01.2017வரை மிகவும் பிரபலமான அவுஸ்திரேலிய ரெனிஸ் போட்டி Australian Open Grandslam ரெனிஸ் தொடரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா (Venus) வீனஸ் வில்லியமும் தங்கை (Serena) செரீனா வில்லியமும் மோதிக்கொண்டனர். இத்தொடரில் சகோதரிகள் இருவரும் வெவ்வேறு அணிகளாக உலகப்புகழ் பெற்ற ஒவ்வொருவரும் 7 வீராங்கனைகளைத் தொற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினர். கடந்த 28.01.2017 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் சகோதரிகள் இருவரும் சந்தித்தனர். மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் தங்கை செரீனா6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றிவாகை சூடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நடைபெறும் ரெனிஸ்போட்டிகளில் மிகவும் பிரபலமானதும் புகழ் வாய்ந்ததும் பெரும்தொகைப் பரிசுப்பணம் வழங்கப்படுவதுமான Grandslam என்று அழைக்கப்படும் ரெனிஸ்போட்டிகளான.. Australian open, Franch open, Wimbledon, US open என நான்கு போட்டிகள் வருடாவருடம் நடைபெறுவது வழக்கமாகும். அந்த வகையில் இந்தவருடத்தின் முதல் போட்டி அவுஸ்திரேலியாவில் கடந்த 16.01.2017 தொடக்கம் 29.01.2017 வரை பல்லாயிரம் பார்வையாளர்கள் மத்தியில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது.

சுமார் நூறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த ரெனிஸ் விளையாட்டாகும். முன்னர் இது பணக்காரர்களின் விளையாட்டாகவே இருந்து வந்தது. பல வருடங்களின் பின்னரே சாதாரண வீரர்களும் கலந்துகொள்ளும் விளையாட்டாக மாறியது எனலாம். வெள்ளைக்காரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் உரியதாக இருந்த விளையாட்டை அமெரிக்க கறுப்பின வீராங்கனையான செரீனா வில்லியம் அவர்களே 1999ல் உலக ரெனிஸ் கிண்ணத்தை வென்று கறுப்பு இனத்தவர்களாலும் இந்தவிளையாட்டில் ஜெயிக்க முடியும் என்பதை நிரூபித்ததால் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

26.09.1981ல் அமெரிக்காவில் பிறந்த கறுப்பினத்தவரான செரீனாவுக்குத் தற்போது 35 வயதாகும். 70 கிலோ நிறையுடைய இவர் 175 சென்றிமீட்டர் உயரமுடையவராவர். தன்னாலும் ரெனிஸ் விளையாட்டில் பிரகாசிக்க முடியும் என உலகிற்குக் காட்டியவர்தான் இந்த இளமங்கை செரீனா. உலக ரெனிஸ் விளையாட்டு வரலாற்றில் இவர் புரிந்த சாதனைகள் ஒன்றா?...இரண்டா?... அடுக்கடுக்காகக் கொண்டே போகலாம்...1995ல் பாடசாலை மற்றும் கழகங்களில் இந்த விளையாட்டை விளையாட ஆரம்பித்து உலகால் அறியப்பட்டார். தொடர்ச்சியாக இந்த விளையாட்டில் முன்னேற்றம் கண்டு உலக விளையாட்டு ரசிகர்களால் அடையாளப்படுத்தப்பட்டார். சுமார் 22 வருடங்களாக விளையாடிவரும் இவர் பல வெற்றிகளையும் சில தோல்விகளையும் கண்டுவந்திருக்கிறார்.

உலக ரெனிஸ் விளையாட்டில் Grandslam என்று அழைக்கப்படும் பெரும் புகழ் வாய்ந்ததும் பெரும் பரிசுத்தொகைகொண்டதுமான நான்கு போட்டிகள் வருடாவருடம் நடைபெறுவது வழக்கமாகும் இந்த நான்கு போட்டிகளிலும் இவர் பல தடவைகள் வெற்றிபெற்றதுடன் வெற்றிக்கிண்ணங்களையும் பரிசுத்தொகைகளையும் அள்ளிக் குவித்திருக்கிறார். அதுவும் இந்தப் புகழ்வாய்ந்த வெற்றிக்கிண்ணங்களை ஒரு தடவையல்ல உலகிலே ஆகக்கூடியதடவைகள் பெற்றது என்ற சாதனையையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். Grandslam போட்டிகளில் இவர் இதுவரை பெற்ற விருதுகளை நோக்கினால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Australian open | 2003, 2005, 2007, 2009, 2010, 2015, 2017 | - 7 தடவைகள் |
| Franch open | 2002, 2013, 2015 | - 3 தடவைகள் |
| Wimbledon | 2002, 2003, 2009, 2010, 2012, 2015, 2016 | -7 தடவைகள் |
| US open | 1999, 2002, 2008, 2012, 2013, 2014 | -6 தடவைகள் |

செல்வி செரீனா கடந்த 28.1.2017ல் அவுஸ்திரேலியாவில் வெற்றிபெற்றதன் பின்பு இந்த Grandslam என்ற உலகப்புகழ்பெற்ற ரெனிஸ் போட்டியில் 23 தடவைகள் வெற்றிபெற்று புதிய உலகசாதனையைப் படைத்திருக்கிறார். இதுவரை ஜேர்மனிய வீராங்கனை ஸ்ரெவ்வி கிராப் பெற்றிருந்த 22 வெற்றிகளை முறியடித்திருக்கிறார். இவை மட்டுமல்லாமல் ஒரே ஆண்டில் 3 Grandslam வெற்றிக்கிண்ணங்களை வென்று இன்னுமொரு சாதனையையும் பெற்றிருக்கிறார்.
2002ல் Franch open , Wimbledon , US open என 3 வெற்றிகள் ஒரே ஆண்டில்
2015ல்Australian open, Franch open, Wimbledonஎன 3 வெற்றிகள் ஒரே ஆண்டில்

ரெனிஸ் வரலாற்றில் அடுத்ததாகப் (Womens doubles) பெண்கள் இரட்டையர் பிரிவுப் போட்டியில் 2009 தொடக்கம் 2016வரை 14 வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றிருக்கிறார். அடுத்து (Mixed doubles) கலப்பு(ஆண் + பெண்) இரட்டையர் ரெனிஸ் போட்டியிலும் (1998, 1999) 2 வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றிருக்கிறார்.

Australian open- Grandslam -2017
அவுஸ்திரேலியா ரெனிஸ் திறந்த சுற்று- 2017

கடந்த 16.01.2017 தொடக்கம் 28.01.2017 வரை நடைபெற்ற இப்போட்டியில் உலக வீராங்கனைகள் பலர் பங்குகொண்டனர். இதில் பல சுற்றுக்களில் 7 பேரைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவானார். இவரைப்போலவே இவரின் சகோதரியான வீனஸ் வில்லியமும் பல சுற்றுக்களில் 7பேரைத் தோற்கடித்து அவரும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி இருவரும் கடுமையாக மோதிக்கொண்டனர். இறுதியில் தங்கை செரீனா 6-4, 6-4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிவாகை சூடிக்கொண்டதுடன் 23வது Grandslam Cup ஐயும் பெற்று உலக சாதனை படைத்தார். இப்போட்டியை சுமார் 75.000 ரசிகர்கள் நேரடியாகக் கண்டுகளித்ததாகவும் பல கோடிக்கணக்கானோர் உலகம் பூராவும் தொலைக்காட்சிகளில் கண்டுகளித்ததாகவும் தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ம் ஆண்டுக்குப்பின் அதாவது 14 வருடங்களின் பின் அக்காவும் தங்கையும் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டது 2017 அவுஸ்திரேலியா ரெனிஸ் போட்டிதான். இது உலக சாதனையாகவும் பதியப்பட்டுள்ளது.
இந்த அவுஸ்திரேலியா திறந்த சுற்றுப் போட்டியில் தங்கை செரீனா 2.67 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அக்கா வீனஸ் 1.34 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பரிசாகப்பெற்று சுமார் 4 மில்லியன் டொலர்களை ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இருவரும் ஒரே நாளில் அள்ளிச் சென்றிருப்பது ஆச்சரியமான விடையம்தான்.

சில ஆண்டுகளாக ரெனிஸ் உலக தரவரிசையில் 2வது இடத்தில் இருந்த செரீனா, அவுஸ்திரேலியாவில் வெற்றிபெற்றதன் பின் 7.780 புள்ளிகளுடன் 31-01-2017 தேதியில் உலகதரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளார். இவரின் சாதனைப் பட்டியல் நீண்டு நிலைத்துவிட்டதொன்றாகும். விளையாட்டு என்பது எந்த இனம், மதம், நிறம்,, நாடு எனப் பாகுபடுத்தப்படவில்லை. திறமை இருந்தால் முன்னிலை வகிக்கலாம் என்பதை செல்வி செரீனா வில்லியம் இந்த உலகத்துக்கு நிரூபித்துக்காட்டியுள்ளார். அவரின் நீண்டகால உழைப்பின் அறுவடையாகப் பணமழை பொழிந்து வெற்றிகளின் உச்சிப்படிகளை எட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

40 லட்சம் டொலர்களை இலங்கைப் பணத்துக்குக் கணக்குப்பார்த்தால் தலை சுற்றி விழுந்தாலும் விழுந்துவிடுவீர்கள். ஆகவே கணக்குப் பார்த்து ஏங்கிவிடாமல் இருந்தால் நல்லதுதானே!.. கறுப்பினத்துக்கு மட்டுமல்லாமல் உலகில் விடுதலைவேண்டிப் போராடும் மக்களுக்கு விடிவெள்ளியாகத் திகழ்ந்த நெல்சன் மண்டலேயைப்போல், உலக ரெனிஸ் விளையாட்டுச் சரித்திரத்தில் அழியாப் புகழ் படைத்து உலகின் முன்னணி வீராங்கனையாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் செல்வி செரீனாவுக்குத் திருமண நிட்சயார்த்தமும் ஏற்கனவே முடிந்துவிட்டதாம். விரைவில் டும்!... டும்!.. நடக்கும் எனவும் தெரிய வந்துள்ளது. எல்லாவற்றிற்கும் சேர்த்து நமது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வோம்!...

-----------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் ஒதுக்கப்படும் இனமா?....

மானிட வாழ்க்கை வரலாற்றின் அடிப்படைகளில் ஒன்று ஆண்-பெண் ஆகும். மனித வாழ்வோட்டம் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளாகவே அசைந்து, சிறந்து, உயர்ந்து, பெருமிதத்தடன் ஓடிக்கொண்டிருக்கின்றது. புரிந்துணர்வுகளும் முரண்பாடுகளும், மோதல்களும், வேற்றுமைகளும், இயலாமையும், சாணக்கியமும் ஒன்றோடொன்று சேர்ந்து இயைந்தே உலக இயங்கியல் முறைமை அமுலாகி வருகின்றது. எனினும் எது உரியது?..எது மேன்மையுடையது?..எது போற்றத் தகுந்தது?..எது ஏற்படையது?..எது நிராகரிக்கத்தக்கது?..எது வணங்கி வழிபடத்தக்கது?..என்றபார்வைகளும் தடுத்து நிறுத்த முடியாதபடி மேற்கிளம்பும் நிலையையும் நாம் கண்டுகொள்ளாமலிருக்க முடியாதல்லவா?.. இந்த வேறுபட்ட ஆய்வு முறைகளினூடேயும் பெண்கள் ஒதுக்கப்படும் இனமா?..என்ற உணர்வினை இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாக அமைத்துக்கொண்டு சில பல கருத்துக்களைச் சிந்திப்போம்...

இதுவரை காலமும் பெண்விடுதலை, பெண்ணியம், பெண்களின் உரிமை, பெண் சுதந்திரம், பெண்தளை நீக்கப் போராட்டம் என்பன அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார மேலைப்புலம் சார்பு நிலைகளிலேயே பெரிதும் கூர்மையடன் நோக்கப்பட்டது. எனினும் இந்நிலைப்பாட்டைவிட இலக்கியம், சமயம், பண்பாடு, கலை, சமூகம், விழுமியங்கள், வாழ்வியல், நெறிப்பாடுகள், இல்லறக்கடமைகள் என்ற பிறிதொரு இயல்பு வகையிலான இரஞ்சக நோக்கு அணுகுமுறையும் "பெண்கள் ஆய்வு" பற்றி, பெண்ணினம்பற்றி மிகக்கூர்மையுடன் நிலவுவதையும் நாம் ஆழமாக மனங்கொள்வது அவசியமாகும்.

பெண்களது பிரச்சனைகள் பற்றி எழுதுவோரும், பேசுவோரும், ஆய்வு நடத்துவோரும் யார்?.. எவர்?..என்று பார்ப்பதும் தகுதி நோக்கிலே இப்பொருள் பற்றிப் புரிந்து கொள்வதற்கு உதவலாம். இதிலே சம்மந்தப்படுவோர் ஆணா?..பெண்ணா?.. உருதுவானவளா?..இல்லையா?.. கற்றவரா?..கல்லாதவரா?.. பட்டதாரியா?..இல்லையா?.. கன்னியா?...சுமங்கலியா?..படை அதிகாரியா?..ஜனாதிபதியா?... புலவனா?..இலக்கியவாதியா?... சட்டத்தரணியா?.. என்ற கூர்மையான நோக்கு நிலைகளும் எந்த மதத்திலே செல்வாக்குச் செலுத்தி பெரிதும் முன்னணி வகிப்பதனை நாம் காணமுடிகின்றதல்லவா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எவ்வாறு இருந்த போதும் இவ்விடயம் முற்றுமுழுதாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்டதொரு ஆய்வு நெறியிலே செல்லக்கூடிய விடையமல்ல..

பெண்கள் யாராலும் ஒதுக்கப்படும் இனம் அல்ல. அனைவராலும் மதிக்கத்தக்க மாண்புறு இனமாகும். ஆனால் சிலரால் பெண்கள் அவமதிக்கப்படுகிறார்கள். தமிழினத்துப் பெண்ணின் தலைமைத்துவ தனித்துவ விழுமியம் கற்புடமை என்பதே. கற்பு என்று ஒன்றில்லை என்பர் மேலத்தேசத்தவர். எப்படியும் வாழலாம் என்ற பெண் நிலைசார் சுதந்திர முழக்கமே உலகில் கடும் மோதல்களாக உருவெடுத்துக் கூர்மையடைந்து வருகின்றது. இதன் அடிப்படையில் பண்பாட்டுக் குழப்பமும், எழுந்தமானக் கருத்தோட்டங்களும், மேலாதிக்க உணர்வுகளுமே பெண்களது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் அம்சங்களைப் பாதிக்கச் செய்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக மதம் சார்பான ஒழுக்கவியல் நியதிகளும், நெறிமுறைகளும் இதுவரை பெண்ணிலை வாதிகளாலே இழிவும் ஏளனமும் செய்யப்பட்டு வருவது ஆபத்துள்ள செயலின் நிலையாகும். கலாச்சார உடைப்பு, அரசியல்புரட்சி, ஆன்மீக நிராகரிப்பு, சமய நம்பிக்கையா?.. என்பன பற்றிய வினாக்கள் மாபெரும் குழப்ப நிலைகளையே தோற்றுவித்துள்ளன.

இதனால் எது உண்மை, எது பொய்மை என்ற தெளிவு இன்று பலரிடம் இல்லாது போய்விட்டது. கொள்கையில் பற்றுறுதியும் திட நம்பிக்கை இல்லாமையும் எதிர்காலத்துக்கான நிலை என்னவென்று புரியாமையுமேயாகும். பெண்களைப் பெண்களே ஒடுக்குகிறார்கள் என்பதும் முறைப்பாடாக இருக்கின்றது. இல்லை ஆண் வர்க்கமே பெண்களை எல்லா விதத்திலும் அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி, கேவலப்படுத்துகிறார்கள் என்று சிலர் பழி கூறுகிறார்கள். சில குடும்பங்களில் இது நிஜமாகவே நடைபெறுகின்றது. பெண்ணின் இயலாமையைப் பயன்படுத்திப் பல ஒடுக்குமுறைகளை செய்கிறார்கள்...

இன்று பெண்ணிலை வாதிகள் என்று வெளிக்காட்டித் திரிவோர் பல்வேறு அந்நியக் கருத்துக்களையும், கோட்பாடுகளையும், பாலியல் விடையங்களையும், நூல்களையும், மாறுதல்களையும், உடுப்புநடப்புகளையும் சிறக்கப் பாடியும் எழுதியும் விவாதித்தும் பிரச்சாரப்படுத்தியும் வருகின்றனர். பெண்கள் முன்னிலை வகித்து பற்பல துறைகளில் முன்னுரிமை பெற்று சாதனை நிகழ்த்திவரும் வரலாறுகளும் உண்டு. எனவே சாதனைகளால் பெண்கள் உயரும் போது அவர்கள் போற்றப்படும் இனம் என்பதே முடிவாகிறதல்லவா..

மானிடப் பெண் தனது அன்பின் வெளிப்பாட்டினாலே தாய்மையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரிப்பினாலே அருள் நிலைத்தன்மை பெறுகிறாள். என்று கருத்துச் சொன்னால் இப்படிச் சொல்பவர்தான் பெண்ணிலை வாதத்தின் முதல் எதிரி என்று குறிப்பிடும் இழி நிலையே இன்று நிலவுகின்றது. எனவே நன்மை, நல்லுணர்வு, நல்லறிவு, நன்நோக்கம், தெய்வீகம் என்பன கொலுவேறும் பொழுதுதான் உலகம் தூய்மை பெறும். தெளிவு பெறும். தூய சிந்தனைகளே தூய செயல்களுக்கான அடிப்படையாகும். ஆகவே பெண்கள் பற்றிய குறைகளையுடைய முற்றுப் பெறாத, தீர்க்க முடியாத கருத்துக்களை விலக்கி நிறைவான மேன்மை மிகு கருத்துக்களைப் பரப்பி விதைப்போமாக!.."பண்பட்ட நிலமே பண்புடைய பெண்" என்பதைப் பொய்மையாக்கலாமா?..அடக்குமுறைகள் ஒழியட்டும்!. சமத்துவம் ஓங்கட்டும்!.

செல்வன். பா. லிங்கேஸ்வரன்.
"அருளகம்" - வவுனியா.

# ஹென்றி மாட்டின்....

தமிழ் வரலாற்றில் 1841ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பெற்ற உதயதாரகை பத்திரிகை பற்றி பலருக்குத் தெரியும். இதனைத் தொடங்கிய ஆசிரியர்களுள் ஹென்றி மார்ட்டின் அப்புக்குட்டியும் ஒருவர்.முற்காலத்திலே நேரத்தை அளப்பதற்கு தமிழர்கள் நாழிகை என்னும் அளவைப் பயன்படுத்தினர்.

| | |
|---|---|
| 1 நாழிகை | - 24 நிமிடம் |
| 2.5 நாழிகைகள் | - 1 ஓரை |
| 3.75 நாழிகைகள் | - 1 முகூர்த்தம் |
| 7.5 நாழிகைகள் | - 1 சாமம் |
| 30 நாழிகைகள் | - 1 பொழுது |
| 60 நாழிகைகள் | - 1 நாள் |

நாழிகை அளவை மணிநிமிட அளவாகவும் மணிநிமிட அளவை நாழிகை அளவாகவும் மாற்றுவதற்கு அறிந்துகொண்ட முதல் சுதேசியாக ஹென்றி மாட்டின் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சும்மா ...!! இதை படியுங்கள் நிச்சயம் அசந்து போவீர்கள்...

இது தான் தமிழ் உலகில் 6000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதாக கூறப்படுகின்றது. இவை அனைத்தையும் விட தமிழ் மொழி சிறப்பு மிக்கது என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. உலகின் மூத்த குடியெனப் பெயர் பெற்ற தமிழினம் பேசும் மொழி. மொழியால் இனம் பெருமை பெற்றது எனில் அது தமிழினமாகத் தான் இருக்க வேண்டும். உலகில் தோன்றி பல மொழிகள் அழிந்து இருந்த இடமே தெரியாமல் போக, தமிழ் மட்டும் இன்றளவும் பேச்சிலும், எழுத்திலும் நீடித்து நிலைத்து தன்னையும், தான் சார்ந்த இனத்தையும் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஏன் இந்த பீடிகை தொடர்ந்து படியுங்கள் புரியும், சும்மா... சொல்லுவோம் தமிழின் சிறப்பை, அது சரி சும்மா? என்றால் என்ன? அடிக்கடி நாம் பாவிக்கும் வார்த்தை தான் இந்த சும்மா. பேச்சு வழக்கு சொல்லாக இருந்தாலும் தமிழ் மொழியில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு வார்த்தை இது.
இந்த வார்த்தைக்கு மட்டும் 15 அர்த்தங்கள் உண்டு வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினை, நாம் அடிக்கடி கூறும் இந்த சும்மா எனும் வார்த்தை எடுத்துக்காட்டும்.

அமைதியாக - சும்மா (அமைதியாக) இருங்கள் - quiet
களைப்பாறிக்கொண்டு - கொஞ்ச நேரம் சும்மா இருக்கின்றேன் - leisurely
உண்மையில் - சும்மா சொல்லக்கூடாது அருமை - in fact
இலவசமாக - சும்மா ( இலவசமாக) கிடைக்காது - free of cost
பொய் - சும்மா கதை அளக்காதே - lie
உபயோகமற்று - சும்மா தான் இருக்கின்றது எடுத்துக்கொள் - without use
அடிக்கடி - சும்மா சும்மா சீண்டுகின்றான் இவன் - very often
எப்போதும் - இவன் இப்படித்தான் சும்மா ( எப்போதும்) சொல்லுவான் - always
தற்செயலாக - ஒன்றுமில்லை சும்மா சொல்கின்றேன் - just
காலி - இந்த பெட்டி சும்மா தான் இருக்கின்றது - empty
மறுபடியும் - சொன்னதையே சும்மா சொல்லாதே - repeat
ஒன்றுமில்லாமல் - சும்மா ( வெறும்கையோடு) போகக் கூடாது - bare
சோம்பேறித்தனமாக - சும்மா தான் இருக்கின்றோம் - lazily
வீணாக - நான் வெட்டியாக (சும்மா) ஏதாவது உளறுவேன் - idle
விளையாட்டிற்கு - இதை எல்லாமே (விளையாட்டிற்கு) சும்மா தான் சொன்னேன் - just for fun

நாம் அன்றாடம் பாவிக்கும் இந்த ஒரு சொல் பயன்படுத்தும் இடத்தின்படியும் தொடரும் சொற்களின் படியும் பதினைந்து அர்த்தங்களைக் கொடுக்கிறது. சும்மாவாவது சிந்தித்தீர்களா இதனை..??
உலகில் உள்ள மற்ற மொழி அனைத்தும் வாயினால் பேச, செவிக்குக் கருத்தை உணர்த்துகின்றமை, ஆனால் தமிழ் மொழி இதயத்தாலே பேசி இதயத்தால் உணரவைக்கும் மொழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைப்பது எப்படி?

இன்று பலரிடமும் சர்வசாதாரணமாகக் காணக்கூடிய ஒரு நோயாக நீரிழிவு உருவாகியிருக்கிறது. எந்தவொரு சாதாரண சிகிச்சைக்குச் செல்லும்போதும் "நீங்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா"? என்ற கேள்வி நிச்சயமாகக் கேட்கப்படும். ஒப்பீட்டு ரீதியில், மேலைநாடுகளை விட தெற்காசிய நாடுகள், குறிப்பாக இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் நீரிழிவு நோய்த் தாக்கம் அதிகமுள்ள நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு என்ன காரணம்? நீரிழிவை எவ்வாறு தடுக்கலாம்? என்ற கேள்விகளுடன், பிரபல நீரிழிவு மருத்துவரும், மதுரையில் இயங்கிவரும் செண்பகம் நீரிழிவு மருத்துவமனை டொக்டர் கிருஷ்ணமூர்த்தி அவரது மருத்துவமனையில் சந்தித்தோம். முழக்க முழக்க நீரிழிவு பற்றிய விழிப்புணர்வுக்கான நேர்காணலாக இது அமைகிறது.

**நீரிழிவு நோய் உருவாவதற்கு என்ன காரணம்?**

பரம்பரைக் காரணிகள் முதற்கொண்டு, உடற்பருமன், தவறான உணவுப் பழக்கம், போதிய உடற்பயிற்சியின்மை எனப் பொதுவாக நீரிழிவுக்கு சில காரணங்களைக் குறிப்பிடலாம். அத்தோடு, நாம் உண்ணும் உணவின் கொழுப்புச் சத்தானது, வயது ஆக, ஆக உடலில் அதிக அளவுக்கு சேமிக்கப்படுவதால், வயது முதிர்வையும் ஒரு காரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

**தெற்காசிய நாடுகளில் இது அதிகமாகக் காணப்படுவது ஏன்?**

புவியியல் மற்றும் இனவேறுபாடுகளே இதற்குக் காரணமாகின்றன. இதனால், மேற்கத்திய நாடுகளில், அறுபது வயதுக்கு மேற்பட்டோரே நீரிழிவுக்கு ஆளாகும் அதேசமயம், தெற்காசிய நாடுகளில், நாற்பது வயதுக்குள்ளாகவே நீரிழிவுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேற்கத்திய நாடுகளில், உடல் எடை நூற்று இருபது அல்லது நூற்று முப்பது கிலோவைத் தாண்டுவோரையே நீரிழிவு தாக்குகிறது எனினும், நமது நாடுகளில், சற்றே உடல் எடை அதிகமானாலும் அவர்கள் நீரிழிவுக்கு ஆளாகிறார்கள். அதிகரிக்கும் உடல் எடையில் சேகரிக்கப்படும் கொழுப்புச் சத்து பரவலாக உடல் எங்கும் தங்காமல், ஒட்டு மொத்தமாக வயிற்றுப் பகுதியிலேயே சேகரிக்கப்படுவதாலேயே இந்நிலை ஏற்படுகிறது. இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், தாம் நீரிழிவால் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரியாமலேயே ஐம்பது சதவீதமான மக்கள் வாழ்ந்து வருவதுதான். ஏனெனில், நீரிழிவு அவ்வளவு சீக்கிரமாக நோய் அறிகுறிகளைக் காட்டுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஏதேனும் காரணத்துக்காக மருத்துவ பரிசோதனை செய்துகொள்ளும்போதுதான் தாம் ஏற்கனவே நீரிழிவு பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது தெரியவருகிறது. இவ்வாறு மிகப் பிந்திய நிலையில் பரிசோதனை செய்துகொள்வதால் பலரும் "டய படிக் ரெட்டினோபதி" மற்றும் "நி யூரோபதி" போன்ற நீரிழிவின் உபரி நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரிய வருகிறது. அதுமட்டுமல்லாமல், இந்நோயின் விளைவாக, கண்கள், சிறுநீரகங்கள், இதயம் போன்ற ஏனைய உடல் உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன.

"ஹைப்பர் டென்ஷன்" எனப்படும் அதீத இரத்த அழுத்தம் மற்றும் அதிக கொழுப்பு ஆகிய இரண்டும் நீரிழிவுக்கு நம்மை இட்டுச்செல்லக்கூடியன. அதேநேரம் நீரிழிவானது நரம்புகளைப் பெரிதும் தாக்கும். இதன் மூலம் ஏனைய உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன. உதாரணத்துக்கு, கண்களின் நரம்புகள் பாதிக்கப்படுவதை "ரெட்டினோபதி" என்கிறோம். இந்தப் பாதிப்பை உணராமல், அல்லது தெரிந்துகொள்ளாமல் போவதால், கண்கள் பார்வை இழக்கும் வாய்ப்புகள் அதிகம். அதுபோலவே, மூளை நரம்புகள் பாதிக்கப்படுவதால், மாரடைப்பு, பக்கவாதம் என்பன உண்டாகலாம். ஒப்பீட்டு ரீதியாக, சாதாரணவர்களைவிட, நீரிழிவு நோயாளர்களுக்கு மாரடைப்பு தோன்றுவதற்கான வாய்ப்புகள் நான்கு மடங்கு அதிகம். மிக முக்கியமாக, உடலில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைச் சத்தை வடிகட்டி வெளியே அனுப்பும் பணியைச் செய்யும் சிறுநீரகங்கள், அளவுக்கு அதிகமாக இயங்க வேண்டி யிருப்பதால், சிறுநீரகங்களும் பாதிக்கப்படுகின்றன.

**பிரசவ காலத்தின் போதும் நீரிழிவு அறிகுறிகள் காணப்படுவதாகச் சொல்கிறார்களே?**

இதில் பல வகைகள் உண்டு. இன்றைய காலங்களில், பெண்கள் வயது கூடிய நிலையில் கருத்தரிப்பதனாலும் நீரிழிவு தோன்றலாம். இன்னும் சிலருக்கு, பிரசவத்துக்கு முன்னைய நாட்களில் நீரிழிவு அறிகுறிகள் இருப்பினும், பிரசவத்தின் பின்னர் அவை மறைந்துபோகலாம். மகப்பேறு என்பது, ஒட்டுமொத்த உடலிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வு. அதன்போது, இரத்த அழுத்தம் பல்வேறு காரணங்களால் நீரிழிவு அறிகுறிகள் உடலில் தோன்றலாம். ஆயினும் முறையான கண்காணிப்பின் கீழ் அது கட்டுப்படுத்தப்பட்டால், பிரசவகால சிக்கல்களை, எடை கூடிய குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கலாம். ஆனால், பிரசவகால நீரிழிவுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்து வருவதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முறையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமிடத்து இந்நிலை மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவு நோய் பற்றிய பரிசோதனைகளுக்கே அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால், அனைவரும் இந்தப் பரிசோதனைகளைச் செய்து கொள்வது இயலாத காரியமாக இருக்கிறது. இதற்கு மாற்று வழி ஏதும் இருக்கிறதா?**

இருக்கிறது. நீரிழிவு பற்றிய ஆராய்ச்சி மூலம், "டயபடிக் ரிஸ்க் ஸ்கோர்"எனும் ஒரு முறை உண்டு. இதன்மூலம், யாராக இருந்தாலும், அவரிடம் ஒரு சில தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம், அவருக்கு நீரிழிவு காணக்கூடிய அல்லது ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள முடியும். இதன் மூலம், நீரிழிவு வருமுன்னரே அதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்

**உடற் பருமனைக் குறைத்துக்கொள்வதற்காகச் செய்யப்படும் "பேரியாட்ரிக்"சத்திர சிகிச்சை மூலம், நீரிழிவை முற்றாக குணப்படுத்திவிடலாம் என்ற ஒரு கருத்து நிலவுகிறதே, அது உண்மை தானா?**

பேரியாட்ரிக் சிகிச்சை நூற்று முப்பது, நூற்றைம்பது கிலோ உடல் எடை உள்ளவர்களுக்கே பரிந்துரைக்கப்படவேண்டும். மிகுந்த பொருட்செலவை உண்டாக்கும் அந்த சிகிச்சையை எல்லோரும் செய்து கொள்ளவும் முடியாது.

**நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் சந்திக்கும் சவால்கள் என்னென்ன?**

முதலில் நீரிழிவு குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இன்னும் அதிகமாக எடுத்துச் செல்லப்படவேண்டும். மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்து மாத்திரைகளை உட்கொண்டாலே நீரிழிவு கட்டுப்பட்டு விடும் என்ற தவறான மனோபாவம் மக்கள் மத்தியில் இருக்கிறது. ஆயினும், மருந்துக்கு அப்பால் உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சிகள், உடல் எடை அதிகரிக்காது பார்த்துக்கொள்ளுதல், புகை பிடிப்பதைத் தவிர்த்தல் போன்ற அனேக அம்சங்கள் இருக்கின்றன. அவற்றை முறையாக அவர்கள் பின்பற்ற வேண்டும்.

**நீரிழிவு நோயாளிகளுக்கு விசேட பாதணிகள் வழங்கப்படுகின்றன. இதன் நோக்கம் என்ன?**

"நியூரோபதி" மற்றும் ரத்த அழுத்தக் குறைவு காரணமாக, நீரிழிவு நோயாளர்களின் கால்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. இதன்போது, அவர்களது கால்கள் உணர்விழக்கும் வாய்ப்பு அதிகம். உதாரணமாக, சூடான ஒரு இடத்தில் அல்லது தீயில் அவர்களது பாதங்கள் இருந்தாலும், அதை அவர்களால் உணர முடியாது அல்லது மிகத் தாமதமாகவே உணர முடியும்.இதனால், அவர்கள் காயப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. இதைத் தடுப்பதற்காகவே விசேட பாதணிகளை அவர்களுக்கு சிபாரிசு செய்கிறோம். நீரிழிவு நோயாளர்கள் பாதணிகளை வாங்கும்போது சில விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பாதத்தின் அளவை விட ஒரு அலகு கூடிய பாதணிகளை வாங்கவேண்டும். பாதணியின் முன் பகுதி, அதாவது நமது பாதத்தின் முன் பகுதியை இலகுவில் அடக்கிக்கொள்ளக்கூடிய இடவசதி உள்ள பாதணிகளைத் தெரிவு செய்யவேண்டும். ஏனெனில், பாதத்தின் முன் பகுதி அதிகமாக இறுக்கப்படுவதால் பாதத்தில் காயங்கள் தோன்ற வாய்ப்பு உண்டு.

நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இன்னமும் கூடுதலாக அதிகரிக்கவேண்டும். சரியான உணவுப் பழக்கம், சீரான உடற்பயிற்சி, சரியான இடைவெளியில் மருத்துவப் பரிசோதனைகள் என்பவற்றைத் தொடர்ச்சியாகக் கைக்கொண்டால் இந்நோய் வராமல் அறவே தவிர்க்கலாம்.

ஏ.தேவராஜன்-தமிழ்நாடு.

## இனிமையான வாழ்வுதரும் இஞ்சி...

-இஞ்சி சமையலுக்கு மட்டுமல்லாமல் வியாதிகளைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

-ஆனால் நகரத்தில் வாழும்மக்கள் இதன் அருமை புரியாமல் கண்ட சிகிச்சையை எடுத்துக்கொண்டு உடலைகெடுத்துக் கொள்கின்றனர்.

-எனவே இஞ்சியின் பயன்களைப் புரிந்துக்கொண்டு ஒரு சில நோய்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் அவற்றை குணப்படுத்தலாம்.

-பிரசவத்தின்போது உண்டாகும் பொதுவான பிரச்சனைகளான குமட்டல், வாந்தி போன்றவைகளுக்கு இஞ்சிச்சாறினை குடித்துவந்தால், அவை எளிதில் குணமாகும்.

-கர்ப்பக்காலத்தில் பெண்களுக்கு உணவு என்பது மருந்தாகத் தோன்றும். இது போன்ற நேரங்களில் இஞ்சியால் தயாரிக்கப்பட்ட ஊறுகாய், துவையல் போன்ற பொருட்கள் பசியினைத் தூண்டி, பசியின்மையைப் போக்குகிறது.

-கீமோதெரபி போன்ற சர்ஜரியின் போது உண்டாகும் குமட்டலைச் சரிசெய்கிறது.

-மூட்டுவலி, சதைப்பிடிப்பு போன்ற வலிகளைக்குறைக்கும் மருந்தாகவும் இதுபயன்படுகிறது.

-கடுமையான போதையையும் முறிக்கும் சக்தி இஞ்சிக்கு இருப்பதாக அறிஞர்கள் பலரும் கண்டறிந்துள்ளனர்.

-எனவே, இஞ்சியை நம் அன்றாட உணவில் எடுத்துக் கொள்வதன் மூலம் பல நோய்களை நாம் எதிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பாலியல் குற்றம் அதிகரித்து வரும் நாடுகளின் பட்டியல்...

உலகில் நாளுக்கு நாள் பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவது மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

வல்லசு நாடான அமெரிக்காவில் 91 சதவீத பெண்களும், 9 சதவீதன ஆண்களும் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர் என அமெரிக்க பீரோ புள்ளியல் தகவலை வெளியிட்டுள்ளது. 6 பெண்களில் ஒருவர் மற்றும், 33 ஆண்களில் ஒருவர் என வாழ்நாள் முழுவதும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். இதில் அதிகமாக கல்லூரி மாணவிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அமெரிக்காவில் பொது இடங்களில் பாலியல் சம்பவங்கள் நடைபெற்றாலும், வீடுகளிலும் அதிகமாக பாலியல் வன்முறை சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அடுத்ததாக் அதிகமாக பலாத்கார குற்றங்கள் நடைபெறும் நாடுகளில் தென் ஆப்பிரிக்காவும் ஒன்று. கடந்த 2012 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 65,000 பாலியல் குற்ற சம்பவங்கள் நடந்துள்ளன என புகார்கள் பதிவாகியுள்ளன. உலகிலேயே இளம் வயது குழந்தைகள் அதிகமாக பலாத்காரத்திற்கு உள்ளாகும் நாடு தென் ஆப்பிரிக்கா நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்நாட்டில் பலாத்கார குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்படுவதால் இக்குற்றங்கள் அதிகம் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

ஸ்வீடன்

ஐரோப்பிய நாடுகளில் பாலியல் குற்றங்கள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ஸ்வீடன் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 2009 ஆம் ஆண்டில் தான் அதிக வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. அதாவது 7,590 புகார்கள் பதிவாகியுள்ளது. 58 சதவீதமாக குற்ற எண்ணிக்கை அதிகரித்துள்ளது.பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றங்கள் இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதில், 24,470 பெண்கள், தங்களது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களால் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர் என புள்ளியல் விபரங்கள் தெரிவிக்கின்றன.இங்கிலாந்து நாட்டிற்கு வருடந்தோறும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். எந்த அளவுக்கு சுற்றுலா பயணிகளை இந்த நாடு கவர்ந்திழக்கிறதோ, அதே போன்று பாலியல் குற்றங்கள் அதிகமாக நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நகரில் தான் அதிக குற்றங்கள் நடைபெறுகின்றன. இந்த இரண்டு பகுதிகளில் மட்டும் ஒரு வருடத்திற்கு சுமார் 85,000 பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர், ஒட்டுமொத்த பிரித்தானியாவில் மட்டும் வருடத்திற்கு 400,000 பெண்கள் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர். சராசரியாக 16 வயது பெண்கூட தான் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டேன் என்று சமூகத்தின் முன்னிலையில் வெட்ட வெளிச்சமாக தெரிவிக்கும் நிலையில் உள்ளது.

ஜெர்மனியில் 240,000 பெண்கள் பாலியல் குற்றங்களால் இறந்துபோயுள்ளனர். இந்நாடு தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிக்கொண்டிருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் பின்தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.1900 ஆம் ஆண்டு காலம் வரை பிரான்சில் பலாத்காரம் செய்வது என்பது ஒரு குற்றம் கிடையாது. ஆனால் அந்நாட்டில் பாலியல் குற்றங்கள் அதிகரித்த காரணத்தால் 1980 ஆம் ஆண்டுக்கு பிறகு பாலியல் குற்றத்திற்கு எதிரான சட்டம் கொண்டுவரப்பட்டது. பிரான்சில் 75,000 பாலியல் குற்றங்கள் நடந்தாலும், 10 சதவீதம் புகார்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

கனடாவில் 2,516,918 பாலியல் குற்ற சம்பவங்கள் நடந்துள்ளதாக பதிவாகியுள்ளது. 3 இல் 1 பெண்கள் பலாத்காரத்திற்கு ஆளாவதாக புள்ளியல் விபரங்கள் தெரிவிக்கின்றன. 62 சதவீத பெண்கள் உடல்ரீதியாகவும், 9 சதவீத பெண்கள் தாக்கப்பட்டு உருக்குலைந்து போயுள்ளனர் எனவும் விபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் போர் முடிந்து 7 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் பாலியல் குற்றங்கள் நாளுக்கு நாள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஐநா ஆய்வின்படி, 1.6 சதவீதம் பேர் கும்பலாக சேர்ந்து பாலியல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். 96.5 சதவீதம் பேர் தொடர்ச்சியாகவே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர். 64.9 சதவீதம் பேர் ஒன்றுக்கும் அதிகமான முறையில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். 11.1 சதவீதம் பேர் 4 பெண்கள் அல்லது அதற்கும் அதிகமான பெண்களை பலாத்காரம் செய்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறை சம்பவங்கள் எத்தியோப்பாவில் வருடத்திற்கு 60 சதவீதம் நடைபெறுகிறது. இந்நாட்டில் அதிகமான பெண்கள் கடத்தல் முறையில் பலாத்காரம் செய்யப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் புதிய முதலமைச்சர்...

தமிழகத்தின் அடுத்த முதல்வராக அவர் 16-02-2017பதவியேற்றுள்ளார் எடப்பாடி பழனிச்சாமி அவரைப் பற்றிய சில தகவல்கள்

62 வயதான எடப்பாடி பழனிச்சாமி சேலம் மாவட்டம் எடப்பாடி நகரின், நெடுகுளம் கிராமத்தைச் சேர்ந்தவர். எடப்பாடி பழனிச்சாமி 1980-ஆம் ஆண்டு அதிமுகவில் இணைந்தார்.

எம்ஜிஆர் மறைவுக்கு பிறகு அதிமுகவில் பிளவு ஏற்பட்டது. இதில் ஜெயலலிதாவின் அரசியல் பயணத்தில் உறுதுணையாக இருந்தவர் எடப்பாடி பழனிச்சாமி.

கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. கொங்கு மண்டலத்தில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக கட்சி வலுப்பெற முக்கிய பங்காற்றினார்.

1989-ம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் அதிமுக சார்பில் சட்டப்பேரவை உறுப்பினராக பழனிச்சாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1991-ம் ஆண்டு மீண்டும் எடப்பாடி தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தேடுக்கப்பட்டார்.

எடப்பாடி பழனிச்சாமி 1991, 2011, 2016 ஆம் ஆண்டுகளில், எடப்பாடி தொகுதியில் அதிமுக சார்பாக போட்டியிட்டு சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1998-ம் ஆண்டு திருச்செங்கோடு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

1999 மற்றும் 2004-ம் ஆண்டில் மக்களவைத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

2011- 2016 ஜெயலலிதா தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அடிக்கடி அமைச்சகம் மாற்றப்பட்ட போதிலும் மாற்றப்படாத அமைச்சர்களில் ஒருவராக எடப்பாடி பழனிச்சாமி இருந்தார்.

கடந்த மே மாதம் 2016-ம் ஆண்டு நடந்த சட்டப் பேரவை தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி மீண்டும், எடப்பாடி தொகுதியில் போட்டியிட்டு நான்காவது முறையாக சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து ஜெயலலிதாவின் விசுவாசியாக இருந்த எடப்பாடி பழனிச்சாமி, கடந்த சட்டப்பேரவை தேர்தலில் சேலத்திலுள்ள 11 தொகுதிகளில், அதிமுக 10 தொகுதிகள் வெற்றி பெற முக்கிய பங்கு வகித்தார்.

2016-ம் ஆண்டு ஜெயலலிதாவால் பொதுப்பணித் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவில் ஏற்பட்டுள்ள பிளவுக்குப் பிறகு அக்கட்சியின் சட்டப்பேரவை குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் தற்போது முதலமைச்சராகியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் மீதான வன்முறைகள்...

பெண்கள் அதிகமாக பலாத்காரம் செய்யப்படுவது எந்த நாட்டில்?
பலாத்கார கொடுமைகள் மற்றும் வன்முறை சம்பவங்களால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவது இந்தியா மற்றும் பிரேசில் நாடுகளில் தான் என ஆய்வில் தெரியவந்துள்ளது.
உலகில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை ஒழிக்கும் தினம் மார்ச்-8
இதனை முன்னிட்டு ACTIONAID என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் வாக்குபெட்டி மற்றும் இணையதளம் வாயிலாக பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் குறித்து வாக்கெடுப்பு நடத்தியுள்ளது.
இதில், பிரேசிலில் 16% பெண்களும், லண்டனில் 12% பெண்களும், தாய்லாந்தில் 8% பெண்களும் வன்முறைக்கு உள்ளாகின்றனர்.
இதில் அதிகப்படியாக பெண்கள் பாதிக்கப்படுவது இந்தியா மற்றும் பிரேசிலில் தான். பிரேசிலில் 87% பெண்களும், இந்தியாவில் 73% பெண்கள் வன்முறையினால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக, இந்தியாவில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் தான் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர்.

---

## பெண்களின் அங்கத்துவம்...

உலகிலுள்ள பாராளுமன்ற நாடுகளில் பெண்களின் அங்கத்துவம் கூடிய நாடாக ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள றுவண்டா நாடுதான் முன்னிலை வகிக்கின்றது. ஏனைய நாடுகளின் தரவரிசையை காணலாம்....

| | | | |
|---|---|---|---|
| 1வது றுவண்டா | - 55 வீதம் | 6வது ஆப்கானிஸ்தான் | - 28 வீதம் |
| 2வது சுவீடன் | - 47 " | 7வது சீனா | - 21 " |
| 3வது கியூபா | - 43 " | 8வது பிரித்தானியா | - 20 " |
| 4வது ஸ்பெயின் | - 36 " | 9வது பிரான்ஸ் | - 18 " |
| 5வது ஜேர்மனி | - 32 " | 10வது அமெரிக்கா | - 17 " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சாதனைப் பெண்கள்



1-உலகின் முதல் பெண் அதிபர் - இஸபெல் பெரோன், அர்ஜென்டினா (1974)
2-உலகின் முதல் பெண் பிரதமர்-சிரிமாவோ பண்டார நாயக, இலங்கை (1960
3.சிலி நாட்டின் முதல் பெண் அதிபர் - மிச்செல் பாச்லெட் (2006)
4.ஒரு நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆப்பிரிக்கப் பெண்மணி - எல்லன் ஜான்சன் சர்லீஃப் லைபீரிய அதிபர் (2005)
5.பக்கிங்காம் அரண்மனையில் குடிபுகுந்த முதல் ஆங்கில அரசு வாரிசு - விக்டோரியா மகாராணி (1837)
6.அமெரிக்காவின் முதல் முதற் பெண்மணி - மார்த்தா வாஷிங்டன்
7.ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் பெண்மணி - சார்லோட்டே கூப்பர், பிரிட்டன், ஒற்றையர் டென்னிஸ்
8.உலகின் முதல் பெண் ஒலிம்பிக் மரத்தான் சாம்பியன் - ஜோன் பெனோயிட், லாஸ் ஏஞ்சல்ஸ் (1984)
9.கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற முதல்பெண்மணி-மௌரீன் காதரின் (1953)
10.ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடந்த முதல் பெண்மணி - கெர்ட்ரூட் எடர்லே, 14 மணி 39 நிமிடங்கள் (1926, ஆகஸ்ட்)
11.ஆங்கிலக்கால்வாயை நீந்திக் கடந்த முதல் ஆசியப் பெண்மணி : ஆரதி சாஹா. இந்தியா (1959)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.நூறு நாட்களில் தனியாக உலகைப் படகு மூலம் சுற்றி வந்த முதல் பெண்மணி - எர்லென் மக் ஆர்தர், ஆங்கில கடற்பயணி (2001)
13.முதல் ஆசிய மிஸ் யூனிவர்ஸ் - புரூக் மகாலானி லீ, அமெரிக்கா, தாய்வான் பூர்வீகம் (1997)
14.அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி - எலிசபெத் பிளாக் வெல் (1849)
15.செயற்கை இதயம்பொருத்திக் கொண்டமுதல் பெண்மணி-மேரிலுண்ட்(1986)
16.உலக சுகாதார அமைப்பின் உலக சுகாதார அசெம்பிளி தலைவரான முதல் பெண்மணி - ராஜ்குமாரி அம்ரித் கௌர், இந்தியா (1950)
17.அமெரிக்காவின் முதல் பெண் அட்டர்னி ஜெனரல் - ஜானெட் ரெனோ (1993)
18.சொந்தமாக தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனத்தைத் துவங்கிய முதல் கறுப்பினப் பெண்மணி - ஒப்ரா வின்ஃப்ரே, பில்லினியரான (1986)
19.ஒரு செய்தித்தாளின் முதல் பெண் எடிட்டர் - ஆன் ஃபிராங்ளின், தி நியூபோர்ட் மெர்க்குரி (1762)
20.அமெரிக்க காங்கிரசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி - ஜானெட் ரான்கிங், மோன்டானா (1916)
21.இஸ்ரேல் நாட்டின் முதல் பெண் பிரதமர் - கோல்டா மேயர் (1964)
22.பிலிப்பைன்ஸ் நாட்டின் முதல் பெண் பிரதமர்-கொரோஸான்அகினோ (1986)
23.கனடாவின் முதல் பெண் பிரதமர் - கிம் காம் பொல் (1993)
24.ஜெர்மனியின் முதல் பெண் சான்சிலர் - டாக்டர் ஏஞ்சலா மெர்கல் (2005)
25.பிரிட்டனின் முதல் பெண் பிரதமர் - மார்க் ரெட் தாட்சர் (1979)
26.அமெரிக்காவின் முதல் பெண்வழக்கறிஞர்-அராபெல்லாமான்ஸ்பீல்டு (1869)
27.முதல் மிஸ் வேர்ல்டு - கெர்ஸ்டின் கிகி ஹாக்கோன்சன், சுவீடன் (19510
28.முதல் மிஸ் யூனிவர்ஸ் - அர்மி குசேலா, பின்லாந்து (1952)
29.தனியாக உலகைப் பறந்து சுற்றிய முதல் பெண் மணி - ஜெர்ரி ஃபிட்ரிட்ஸ் மோக், 29 நாட்கள் (1864)
30.ஆக்சிஜன் இன்றி எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி - லிடியா பிராடே, நியூசிலாந்து (1988)
31.எவரெஸ்டை அடைந்த உலகின் முதல் பெண்மணி : ஜீங்கோ தாபேய், ஜப்பான் (1975 மே, 16)
32.விண்வெளி சென்ற உலகின் முதல் பெண்மணி : வாலென்டினா தெரஷ்கோவா, ருஷ்யா (1963)
33.விண்வெளி சென்ற முதல் கறுப்பினப் பெண்மணி : மா கரோல் ஜெமிசன். என்டவர் (1992)
34.விண்வெளியில் நடந்த உலகின் முதல் பெண்மணி : காத்ரின் டி. சுல்லிவன், சாலஞ்சர் பயணம் (1984)
35.உலகின் முதல் விண்வெளி பெண் சுற்றுலாப் பயணி : அனுஷ் அன்சாரி, ஈரான் (2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36.சூப்பர்சானிக் கான்கார்ட் விமானத்தின் முதல் பெண் பைலட் : பார்பரா ஹார்மர், பிரிட்டீஷ் ஏர்வேஸ் (1993, மார்ச் 25)
37.உலகின் முதல் பெண் ஏர்பஸ் பைலட் : துர்பா பானர்ஜி, இந்தியா (1987)
38.உலகின் முதல் ஹெலிகாப்டர் பெண் பைலட் : ஹன்னா ரெயிட்ஷ், ஜெர்மனி (1938)
39.ஐரோப்பாவில் மருத்துவராகத் தேர்வு பெற்ற முதல் பெண்மணி : டாக்டர் மரியா மான்டசேரி, இத்தாலி (1896)
40.சமூக சேவைக்காக நோபல் பரிசுபெற்ற முதல் பெண்மணி -அன்னைதிரேசா

-----------------------------------------------------------

# ஏப்ரல் முட்டாள் தினம்!..

பல நாடுகளில் முதலாம் திகதியை ஏப்ரல் முட்டாள்கள் தினமாகக் கொண்டாடி வருகிறார்கள். இதில் சுவையான விடயமென்னவெனில், பலர் தாம் ஏன் இத்தினத்தை முட்டாள்கள் தினமாகக் கொண்டாடுகிறோம் எனத்தெரியாமலேயே கொண்டாடி வருவதுதான். ஆனால் இத்தினம் உருவானதற்கு ஒரு வரலாறு இருக்கின்றது. அதாவது, 17ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் பல ஐரோப்பிய நாடுகளில் ஏப்ரல் முதலாம் திகதியைத்தான் புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். பின்னர் புதுவருடக் கொண்டாட்டம் ஜனவரி முதலாம் திகதிக்கு மாற்றப்பட்டது. ஆனால் பழமையை விரும்பிய சிலர் தொடர்ந்தும் ஏப்ரல் முதலாம் திகதியையே புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். அவ்வாறு கொண்டாடியோரைக் கேலி செய்வதற்காக, ஜனவரி முதலாம் திகதியைப் புதுவருட தினமாகக் கொண்டாடியோர் அவர்களை"முட்டாள்கள்" என்றும், அத்தினத்தை "முட்டாள்கள் தினம்" என்றும் அழைத்தனர். அதுவே பின்னர் ஏப்ரல் முட்டாள்கள் தினமாக வரலாற்றில் இடம் பிடித்துவிட்டது.

-----------------------------------------------------------

பொன்மொழிகள்!..

-கொடுப்பதற்கும் சேமிப்பதற்கும் அறிவு வேண்டும்.
-தொடக்கத்தைவிட முடிவைப்பற்றி அதிகமாகச் சிந்தனைசெய்.
-கடன்வாங்குதல் ஏழைக்குப் பிறக்கும் முதற்குழந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 செல்வந்தர்கள் 360 கோடி மக்களின் பணமதிப்பை கொண்டுள்ளனர்...

உலகின் முதல் எட்டு செல்வந்தர்களின் பணமதிப்பானது உலகில் வாழும் 360 கோடி எளிய மக்களின் பணப்பெறுமதியை விட அதிகம் என ஆய்வறிக்கையொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. ஒக்ஸ்பேம் எனப்படும் லண்டன் ஆய்வு நிறுவனம் இந்த தகவல் வெளியிட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்கான உலகின் முன்னணி பணக்காரர்களின் பட்டியலில் பில்கேட்ஸ் முதலாம் இடத்தில் உள்ளார். இவரது சொத்துக்களின் பெறுமதி 75 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஸ்பெய்ன் நாட்டின் அமென்சியோ ஒட்டேகோ 67 பில்லியன் பெறுமதியான சொத்துடமையுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார். இதேவேளை, அமெரிக்காவின் வாரன் பு∴பெட் 60. 8 பில்லியன் சொத்துடமையுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார். கார்லோஸ் ஸ்லிம் ஹெலு (Carlos Slim Helu) , ஜெ∴ப் பெஜோஸ் (Jeff Bezos), மார்க் ஜுக்கர்பெர்க் (Mark Zuckerberg), லாரி எலிசன் (Larry Ellison), மைக்கேல் ப்ளூம்பெர்க் (Michael Bloomberg) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

குறித்த செல்வந்தர்களின் மொத்த சொத்து பெறுமதி 64 லட்சத்து 68 ஆயிரத்து 11.2 கோடி இலங்கை ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலகின் செல்வந்தர்களிடம் பணம் பெருகிச் செல்கின்ற அதேவேளை, உலகில் வாழும் பெரும்பான்மை மக்கள் தொடர்ந்தும் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விதவைகள்...**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்ததினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான விசேட நலத்திட்டங்களை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என தமிழ்த்தரப்பினர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வீழ்ச்சி...**

உயர் அரச பதவிகளை வகித்த தமிழ் அதிகாரிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1956ல் 30 சதவீதமாகக் காணப்பட்ட தமிழ் அரச உயர் அதிகாரிகளின் எண்ணிக்கையானது 1970ல் ஐந்து சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று சிறிலங்கா இராணுவத்தில் 1956ல் 40 சதவீத தமிழர்கள் பணியாற்றிய போதிலும் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் இந்த வீதமானது ஒரு வீதமாகக் குறைவடைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே உஷார்!....

பெண்கள் தங்களது நடைமுறைகளில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியம். நீங்கள் மற்றவர்களிடம் பழகும் விதத்தால் உங்கள் மீது, அவர்களுக்கு மரியாதை ஏற்பட வேண்டுமே தவிர, அவமரியாதை ஏற்பட்டுவிடக்கூடாது.
குறிப்பாக நீங்கள் ஆண்களிடம் பழகுகிறீர்கள் என்றால் அவர்களின் மனநிலையை அறிந்துகொள்ளுங்கள், ஏனெனில் அதனை அறிந்துகொள்ளாமல் பழகினால், நாளடைவில் நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம்.

ஆண்கள், உங்களிடம் பேசும் போது தனது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒண்ணுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.
தேவையே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சத்தமாக சிரிக்காதீர்கள். இது ஆண்களை உங்களை பற்றி தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்தத் தூண்டும்.

உங்கள் வீட்டில் விழா, விசேஷம் தவிர வேறு எந்த விடயத்திற்காகவும் உடன் வேலைப் பார்க்கும் ஆணை தேவையில்லாமல் வீட்டுக்கு அழைக்காதீர்கள். நீங்களும் எந்த காரணமும் இல்லாமல் துணையில்லாமல் அவர்கள் வீட்டிற்கு செல்லாதீர்கள்.

எதற்காகவும், எந்த பிரச்சினைகளுக்காகவும் ஆண்கள் முன்னால் அழாதீர்கள். அழும் பெண்களை சுலபமாக ஆண்கள் திசை திருப்பிவிடுகிறார்கள்.ஆண் எந்த நோக்கத்திற்காக உங்களிடம் பேசுகிறான் என்று அவன் நோக்கத்தை அவன் வார்த்தைகளிலும் நடைமுறைகளில் இருந்து பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப்பொறுத்தே ஒரு பெண் ஆணிடம் பழகும்போது அந்த உறவை எவ்வளவு தூரத்தில் வைக்கலாம் என்று வரைமுறைப்படுத்திக் கொள்ள முடியும்.

குறிப்பாக, அலுவலகத்தில் உடன் வேலை செய்யும் ஆண்களுடன் நட்புறவுடன் பழகினாலும், அதற்கொரு வரையறை வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் வரையறையை மீறும் கட்டத்தில், பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும்.
அதுபோன்று, சாலைகளில் நடந்து செல்லும்போதும் பார்வைகளை அங்கும் இங்கும் அலைபாய விடக்கூடாது, இருப்பினும் கவனித்து செல்ல வேண்டிய சில விடயங்களை கவனித்து தான் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணியாக மீண்டும் ஏஞ்சலா மெர்கல்!



உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணியாக தொடர்ந்து ஆறாவது முறையாக தெரிவாகியுள்ளார் ஜேர்மனியின் சான்சலர் ஏஞ்சலா மெர்கல்.அமெரிக்க பத்திரிகையான ஃபோர்ப்ஸ் 11வது முறையாக உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணிகள் பட்டியலில் இவருக்கு முதலிடத்தை வழங்கி கவுரவித்து வருகிறது. மட்டுமின்றி கடந்த 2011 ஆம் ஆண்டு தொடங்கி 6 முறை இந்த பட்டியலில் முதலிடத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளார் ஏஞ்சலா மெர்கல்.இந்த பட்டியலில் முதன் முறையாக இடம் பிடித்துள்ள ஸ்காட்லாந்து அரசியல்வாதியான நிக்கோலா ஸ்டர்ஜியன் 50-வது இடத்தில் உள்ளார்.2016 ஆம் ஆண்டின் உலகின் சக்திவாய்ந்த பெண்மணிகள் 100 பேரை தெரிவு செய்துள்ள ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் பட்டியலில் 51 பேர் அமெரிக்கர்கள், வெறும் 6 பேர் மட்டுமே பிரித்தானியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### உலகப் பாராளுமன்றங்களில் பெண்களின் பங்களிப்பு...

| | |
|---|---|
| ஸ்கன்டிநேவியன் நாடுகள் | -42% |
| அமெரிக்க நாடுகள் | -23% |
| ஐரோப்பிய நாடுகள் | -21% |
| ஆபிரிக்க நாடுகள் | -20% |
| ஆசிய நாடுகள் | -18% |
| அவுஸ்திரேலிய நாடுகள் | -15% |
| அரபு நாடுகள் | -11% |

உலகப் பாராளுமன்றங்களில் 1997 ஆண்டில் பெண்களின் பங்களிப்பு 12 வீதமாக இருந்தது. 2016ல் 23 வீதமாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனியில் அகதிகளுக்கு உதவிசெய்த ஈழத்து பெண் படுகொலை....



ஜேர்மனியில் வசித்து வரும் ஈழத்து பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனிய ஊடகங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.சோபிகா என்ற ஈழத்துப் பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 11.02.2017 சனிக்கிழமை அதிகாலை 02.00 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது குடியிருப்பு பகுதியில் வைத்து தாக்குதலுக்கு இலக்காகியிருந்த பெண் தொடர்பில் பொலிஸ் மற்றும் அம்புலன்ஸ் வண்டி உதவிகோரியிருந்த போதிலும், அவர்கள் தாமதமாகவே அந்த இடத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இதனையடுத்து, குறித்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுஇந்த படுகொலை சம்பவம் தொடர்பில் நைஜீரிய நாட்டு அகதி ஒருவர் தொடர்புப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொலைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட ஈழத்து பெண் சோபிகா ஜேர்மனிக்கு அகதிகளாக வரும் மக்களுக்கு உதவி செய்யும் நற்பணிமன்றங்களுடன் இணைந்து சேவை செய்து வருபவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணி செய்த இந்தப்பெண்ணுக்கு நடந்த கொடூரத்தை கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு எங்கள் ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 யூரோ |
| 02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜமோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி | - சுவீஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 06. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 07. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 யூரோ |
| 11. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 100-00 யூரோ |
| 12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 யூரோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 31-12-2016 + 41-36

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07.செல்வன் எமில் சர்வானந்தன் - London + 200-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு வருடாந்த அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00


--------

741-36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | | + 741-36 |
| அனுப்பியது: - | | | |
| 2. ரூத் மிஷன் - ஜெயபுரம் | | | |
| சிறுவர் இல்லம் - கிளிநொச்சி | | - 500-00 | |
| வங்கிக்கட்டணம் 1x 35-00 | | - 35-00 | |
| | | ------- | |
| | | - 535-00 | |
| வங்கிவரி:- | (01.01.2017 - 31.01.2017) | - 12-46 | |
| | (01.02.2017 - 02.02.2017) | - 12-46 | |
| | | ---------- | |
| | | - 559-92 - | 559-92 |
| | | | ---------- |
| - 28-02-2017ல் மீதி கையிருப்பு | | | + 181-44 |


RECEIPT

SRI AHILANDESWARY ARULAHAM — No. 13877

Kovilkulam (Home for the orphans)

Vavuniya. T.P : 024 2221665 — Date 3/12/2017

Received with thanks from Mr. V. Sivaganesa

Address Germany. Mann

the sum of Rupees Nine Hundred Sixty Five

Cts.

on account of

Name of Bank — Cheque No


Dated — SRI AHILANDESWARY ARULAHAM

CASH / CHEQUE Rs. 144,677/29 Bank of Ceylon

Manager



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SRI AGILANDESHWARY ARULAHAM

ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESVARAR THIRU KOVIL

"May we protect tender hearted children with compassion"

Banker: Bank of Ceylon - Vavuniya. A/C No. [illegible] Reg No. [illegible]

January 16,2017

[illegible]

144,679/- [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RUTH MISSION
Jeyapuram north E-mail : g.jeyaratnam@ymail.com.
Jeyapuram. Kilinochchi: 0778380254.:. 0213202588
22.01.2017

அன்பின் சிவராஜா ஆசிரியர் அவர்கட்கு அன்பின் வாழ்த்துக்கள்.
கடவுள் அருளால் இங்குநாம் யாவரும் நலமாகஉள்ளோம். உங்களையும் மனைவி பிள்ளைகள் குடும்பங்களையும் இறைவன் பாதுகாத்து புது பலனுடன் புதியபணிகளைச் செய்ய தேவையானபலன் ஞானம் சுகபலனை தந்துவழிநடத்துவாராக. எல்லாவற்றிற்காகவும் இறைவனிடம் மன்றாடுகின்றோம். உங்கள் தாய் தந்தையர் நினைவுநாளை யொட்டி உங்களது பேரப்பிள்ளையும் பூட்டப்பிள்ளைகள் எல்லோரும் சேர்த்து எமது இல்லப்பிள்ளைகளின் நத்தார் கொண்டாட்டத்திற்கு அனுப்பிய பணத்திற்கு மிக்கநன்றி. பணம் அனுப்பிய ஒவ்வொருபிள்ளைகளிற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். உங்களது பணியில் இது மிகப்பெரியபணி என நான் கருதுகின்றேன்.காரணம் சிறுபிள்ளைகளிற்கும் இப்படி கஸ்டப்பட்ட பிள்ளைகளின் நலன்கருதி உண்டியல் மூலம் சேகரிக்கும் பழக்கத்தை உருவாக்கிஉள்ளீர்கள். இப்பழக்கம் அனேகருக்கு ஒருமுன்மாதிரி எனநான் கருதுகின்றேன். எல்லோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

| | |
|---|---|
| செல்வன் அகவொளி பிரபாகரன் | 3.22 |
| செல்வன் அருண் பன்னீர்செல்வன் | 19.00 |
| செல்வன் நிதுசன் நிசாகரன் | 7.49 |
| செல்வி சப்றினா சபேசன் | 12.81 |
| செல்வி தனுஸ்கா ஜனார்த்தனன் | 40.81 |
| செல்வி றொபிற்றா ஜெகான் | 9.99 |
| செல்வி கவிநிலா தர்மகுலசிங்கம். | 12.60 |
| திரு.திருமதிஅழகராசா | 11.15 |
| செல்வி லேயாஅமலா பிராங்ளின் | 32.93 |
| **மொத்தம்** | **150.00 யூரோ** |

பிள்ளைகள் அனைவரும் தங்கள் அன்பையும் நன்றியையும் தெரிவிக்கின்றார்கள். மிகவும் சந்தோசமாக உள்ளார்கள். நீங்கள் செய்துவரும் இந்தஉதவிகளுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். தொடர்ந்தும் எமது இல்லப்பிள்ளைகட்கு இப்படியான உதவிகளைச்செய்து அவர்களது கல்விவளர்ச்சியை ஊக்குவிக்கவேண்டும் எனமிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிள்றேன்.
நன்றி. இறையாசிகள்!..
இங்ஙனம்... Sis Gladys



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள் சில....

சீனா, லண்டன் இடையிலான நேரடி சரக்கு ரயில் சேவையை சீனா தொடங்கி வைத்துள்ளது.சீனாவின் கிழக்கில் உள்ள யீ வூ நகரிலிருந்து புறப்பட்டுச் சென்ற சரக்கு ரயில் இரண்டு வாரங்களில் 12,000 மைல்(19,000 கி.மீ) பயணித்து லண்டன், Barking நிலையத்தை சென்றடையவுள்ளது. ஐரோப்பா நாடுகளுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை பலப்படுத்தும் நோக்கத்தில் சீனா இந்த ரயில் சேவையை தொடங்கியுள்ளது.

153 பேருக்கு சவுதி அரேபியாவில் மரண தண்டனை! இஸ்லாமிய சட்டங்களை மீறிய குற்றத்திற்காக சவுதி அரேபியாவில் கடந்த வருடத்தில் மட்டும் 153 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை தகவல் வெளியிட்டுள்ளது

சுவிட்சர்லாந்தில் பனிச்சறுக்கு விளையாட்டின் போது ஏற்பட்ட விபத்துக்களில் சிக்கி இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,884 என அந்நாட்டு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்தில் பனிச்சறுக்கு விளையாட்டின் போது பனிச்சரிவில் சிக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சுவிட்சர்லாந்து முழுவதும் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த இது போன்ற உயிரிழப்புகளின் எண்ணிக்கையை கடந்த 1936-ம் ஆண்டு முதல் சுவிஸ் பப்ளிக் தொலைக்காட்சி பதிவு செய்து வருகிறது. அண்மையில் அது வெளியிட்டுள்ள புள்ளி விபரம் பனிச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 1,884 என தெரிவித்துள்ளது.

சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் பயன்படுத்திய கொலைகார தொலைபேசி ரூ.1,63 கோடிக்கு ஏலம் போனது ஜெர்மனி நாஜி சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் பயன்படுத்திய டெலிபோன் ரூ. 1.63 கோடிக்கு ( 2,43,000 டாலர்கள்) ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏலம் அமெரிக்காவில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது

உலகில் மிகக் கூடிய சராசரி வயதை உடைய பெண்கள் தென்கொரியப் பெண்களே என்று ஆய்வு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. "த லேன்சே" என்ற அமைப்பு நடத்திய ஆய்வொன்றில் இருந்தே இது தெரியவந்துள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மனிதர்களின் சராசரி வயதெல்லை அதிகமே. என்றபோதும், அமெரிக்காவில் வாழும் பெண்களின் ஆயுட்காலம் 83 வயதுகளே என்றும் தெரியவந்துள்ளது. அதுமட்டுமன்றி, உலகில் ஆயுட்காலம் அதிமாக உள்ள நாடாக மொனாக்கோ விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் செய்திகள் சில...

6,500 பேர் சேவையிலிருந்து விலகினர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட மூன்றுமாத காலப்பகுதியில், 6,500 பேர், பொதுமன்னிப்பின் பேரில் சேவையிலிருந்து விலகியுள்ளதாக, இராணுவ ஊடக பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

டிசெம்பர் மற்றும் ஜனவரி ஆகிய மாதங்களில் மழையுடன் கூடிய வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50,000ஐ விடவும் அதிகரிக்கும் அபாயமான சாத்தியக்கூறுகள் இருப்பதாக, சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது டெங்குக் காய்ச்சல் காரணமாக 2016ம் ஆண்டு 77க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 47 ஆயிரத்து 834 பேர் டெங்குக் காய்ச்சால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தினைச் சேர்ந்த 1 இலட்சம் பேர் இந்தியாவில் இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் லண்டனின் இலங்கைக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழுக்களின் தலைவர் லோர்ட் நெசபியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் கடும் வறட்சி: 7 இலட்சம் பேர் பாதிப்பு வறட்சியினால் வட மாகாணத்தில் 2,36,346 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. வறட்சியினால் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 95,387 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியினால் 38,606 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.மன்னார் மாவட்டத்தில் 51,369 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,02,005 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகில் மக்கள் காணாமல் போதல், காணாமல் ஆக்கப்படுத்தல் போன்ற விடயங்கள் தற்போதும் நீடித்துக்கொண்டே செல்கின்றது எனலாம், அந்தவகையில் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரின் போது காணாமல் போதல் என்பது இலங்கையில் சர்வசாதாரண விடயமாகவே சில தரப்பினரால் பார்க்கப்படுகின்றது. அந்த வகையில், காணாமல் போதல், பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் ஆகிய விடயங்களில் உலக அளவில் இலங்கை 2 ஆவது இடத்தை பிடித்துள்ளதாக கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வின்போது, பலவந்தமாக கடத்தல் மற்றும் காணாமல் போதல்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகம் தெரிவித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜேர்மனியின் 12வது புதிய தலைவராக (ஜனாதிபதி) முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பிராங் வால்டர் ஸ்ரைன்மயர் தெரிவாகியுள்ளார். இவர் SPD கட்சியைச் சேர்ந்தவர். இவரின் துணைவியார் நாட்டின் முதல் பெண்மணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏரியில் வீசப்பட்ட குழந்தைக்கு தாயான பெண் பொலிஸ் அதிகாரி!...




மொனராகலையில் கைவிடப்பட்ட குழந்தையை பொலிஸ் பெண் அதிகாரிகள் பராமரிக்கும் நிலை குறித்து தகவல் வெளியாகியுள்ளது.மொனராகலை கச்சேரி சந்தியில் 4 மாத பெண் குழந்தை ஒன்று ஏரியில் வீசப்பட்ட நிலையில் மக்களால் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழந்தையை புத்தல பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவரே ஏரியில் வீசியுள்ளார். அந்தப் பெண் குழந்தையின் தாய் எனவும் அவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏரியில் மீட்கப்பட்ட குழந்தையை மொனராகலை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் பெண் பொலிஸ் அதிகாரிகள் அந்தக் குழந்தையைக் குளிப்பாட்டி பால் கொடுத்து பராமரித்துள்ளனர். எனினும் குறித்த குழந்தை அவரின் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2016

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)
முதற் பரிசுரூபா 5000/= இரண்டாம் பரிசு: ரூபா 3000/=
மூன்றாம் பரிசு: ரூபா 2000/=
ஏனைய ஏழ சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
போட்டிக்கான விதிகள்
சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்.
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.
தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச்சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
அனுப்ப வேண்டிய முகவரி:
ஞானம் கிளை அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
போட்டி முடிவுத் திகதி : 30.03.2017
முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. -ஆசிரியர்

---

## தமிழ்மொழித்திருவிழா-2017

**காலம்: 01.04.2017 சனிக்கிழமை பிற்பகல் 15.00 மணி**
**இடம்: Munster Str 122, 44145 Dortmund - Germany**

நிகழ்வுகள்:-

| | | |
|---|---|---|
| மங்கலவிளக்கேற்றல் | - அகவணக்கம் | - தமிழ்மொழிக்கீதம் |
| தலைமையுரை | - ஆசியுரை | - சிறப்புரை |
| பட்டிமண்டபம் | - கவியரங்கம் | - ஆய்வரங்கம் |
| நடனங்கள் | - நாடகம் | - பொய்க்கால்குதிரையாட்டம் |
| பரிசளிப்பு | - கௌரவிப்பு | - இன்னும் பல நிகழ்வுகள் |

விழா ஏற்பாட்டுக்குழு:- 0049 259224553
0049 15214126728



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டம்
கிளிநொச்சி மாவட்டம் - பரவிப்பாஞ்சான்
முல்லைத்தீவு மாவட்டம் - கேப்பாப்புலவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 182

# தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்!

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org